# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 17 செவ்வாய்க்கிழமை (03-10-2000) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:242


## பலாலியை நோக்கி மீண்டும் புலிகள் பீரங்கித் தாக்குதல்!

யாழ்ப்பாணம்,ஒக்.3

பலாலியிலுள்ள வடபகுதி இராணுவத் தலைமையகத்தின் உயர் பாதுகாப்பு பிரதேசங்களை நோக்கி மீண்டும் தமது பீரங்கித் தாக்குதல்களை புலிகள் நடத்தி வருவதாக ரோய்ட்டர் மற்றும் செய்தி வட்டாரங்கள் அறிவித்திருக்கின்றன.

கடந்த சனியன்று மாலையிலும் நேற்றும் பல தடவைகள் பலாலித் தளத்தை நோக்கி பீரங்கிகள் ஏவிவிடப்பட்டதாக கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து விமானத்தில் கொழும்புக்குச் செல்வதற்காக கடந்த சனியன்று பலாலிக்குச் சென்றிருந்த சிவில் அதிகாரிகள் சிலர் இந்தப் பீரங்கித் தாக்குதல்களை அடுத்து பலாலியிலுள்ள பதுங்குகுழிகளில் சற்றுநேரம் தஞ்சமடைந்திருந்த பின்னர் விமான சேவை ரத்துச் செய்யப்பட்டதால் கொழும்புப் பயணத்தைக் கைவிட்டு யாழ்.நகர் திரும்பியதாக அறியவந்தது.

"பலாலி விமானத் தளத்தைத் தாக்குவது புலிகளின் திட்டமாக இருக்கலாம். ஆனால் விமான ஓடு பாதைக்கு மிகத் தூரமாகவே அவர்களின் பீரங்கிக் குண்டுகள் விழுந்தன" - என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக செய்தி நிறுவனம் ஒன்று குறிப்பிட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஹிஸ்புல்லாவை இலக்கு வைத்து மற்றும் ஒரு தாக்குதல் நேற்று!

### இம்முறை குண்டு வெடிப்பில் தப்பினார்!!

மட்டக்களப்பு,ஒக்.3

பிரதியமைச்சரும்,தேசிய ஐக்கிய முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமான எம்.எச்.எம். ஹிஸ்புல்லாவை இலக்கு வைத்து நேற்று மீண்டும் மற்றோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

எனினும் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார். பிரதியமைச்சரின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த பொலீஸார் காயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்று மாலை4.45 மணியளவில் ஏறாவூர் - காத்தான்குடி வீதியில் இடம்பெற்றது.

இந்த வீதியூடாகப் பிரதியமைச்சர் பயணம் செய்த வாகனம் சென்று சிலநொடிகளில் வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளில் பொருத்தப் பட்டிருந்த குண்டு வெடித்ததாகவும் - அமைச்சருக்குப் பாதுகாப்பாகச் சென்ற பொலீஸா

(14ஆம் பக்கம் பார்க்க)

# மூதூரில் அரசுத் தரப்புக் கூட்டத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்!

## வேட்பாளர் உட்பட 23 பேர் பலி! ஐம்பது பேர் படுகாயமடைந்தனர்

திருகோணமலை,ஒக்ரோபர்3

**மூதூரில் நேற்று மாலை 6.30 மணிக்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்று முடிவுற்ற சமயம் அக்கூட்டம் நடைபெற்ற பகுதியில் நடத்தப்பட்ட ஒரு தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் அந்த முன்னணியின் வேட்பாளரான முஹமட் உபைதுல்லாவும்(வயது 40) மற்றும் 22 பேரும் உயிரிழந்தனர்; ஐம்பது பேர் படுகாயமடைந்தனர்.**

திருகோணமலை நகரிலிருந்து சுமார் 12 மைல் தூரத்திலுள்ள மூதூரில் வேட்பாளர் உபைதுல்லாவுக்கு ஆதரவாக மூதூர் கலாசார மண்டபத்தில் நேற்று மாலை தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. இந்தக் கூட்டம் முடிவடைந்து மாலை 6.30 மணியளவில் உபைதுல்லா தமது ஆதரவாளர்கள் சகிதம் காரில் ஏறச் சென்ற சமயம், அவரது காருக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவுக்குள் இருந்ததாகக் கூறப்படும் பெண் தற்கொலைத் தாக்குதலாளி குண்டை வெடிக்க வைத்ததாகச் சொல்லப்படுகிறது.

படுகாயமடைந்த நிலையில் உபைதுல்லா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட சமயம் இடைவழியில் அவரது உயிர் பிரிந்தது.

சம்பவ இடத்தில் மேலும் 15 பேர் உயிரிழந்தனர்;எட்டுப்பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட

(14ஆம் பக்கம் பார்க்க)

## கொல்லப்பட்ட வேட்பாளர் முன்னாள் சப் இன்ஸ்பெக்டர்

திருகோணமலை,ஒக்.3

மூதூரில் நேற்றுமாலை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த பொது மக்கள் ஐக்கியமுன்னணி வேட்பாளர் உபைதுல்லா சப் இன்ஸ்பெக்டராகப் பணிபுரிந்து ஆறுமாதத்துக்கு முன்பே ஓய்வு பெற்றிருந்தார்.

திருகோணமலை பொலீஸ் தலைமையகத்தில் இயங்கிய நாசகாரப்பிரிவின் பொறுப்பதிகாரியாக இவர் கடமையாற்றி வந்தவர் எனக் கூறப்படுகிறது.

ஓய்வு பெற்ற பின்னர் அவர் அமைச்சர் அஷ்ரப்பின் அந்தரங்கச் செயலாளராக இருந்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து அதன் சின்னத்தில் போட்டியிடுவது என்று எடுக்கப்பட்ட முடிவுக்கு ஏற்ப இவர் அங்கு அந்த முன்னணியின் வேட்பாளராகக் களத்தில் குதித்தார். (உ-3-150)

## 'ராகிங்' கொடூரம் புரிந்த 6 பல்கலை மாணவர்களுக்கு 3 மாத இடைக்காலத் தடை

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்று வந்த 'ராகிங்' சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் 6மாணவர்களுக்கு பல்கலைக்கழக வளாகத்துக்குள் பிரவேசிப்பதற்கு 3மாத காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் -

இது தொடர்பான கடிதங்கள் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டதாகவும் -

பல்கலைக்கழக வட்டாரங்கள்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றும் எழுதுமட்டுவாழ் பகுதியில் நான்கு மணி நேர உக்கிரச் சண்டை

யாழ்ப்பாணம்,ஒக்.3

எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கப்படைகளுக்கும் இடையில் நேற்றும் நான்கு மணி நேரம் உக்கிர போர் நடைபெற்றது. நேற்று மாலை 4.30 மணியளவில் விடுதலைப்புலிகள் ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்களை நடத்தி சண்டையைத் தொடங்கினர் என அறியப்படுகிறது.

விடுதலைப்புலிகள் நடத்திய கடும் தாக்குதல்களை இராணுவத்தினர் பதில் தாக்குதல்களை நடத்தி முறியடித்துவிட்டதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சண்டையில் புலிகள் தரப்பில் 15 பேர் வரை உயிரிழந்ததாகவும் இராணுவத்தரப்பில் 4 சிப்பாய்கள் இறந்து 43 பேர் காயமடைந்துள்ளதாகவும் அரசு தரப்பில் மேலும் அறிவிக்கப்பட்டது.

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் "ஓயாத அலைகள்-4" படை

(14ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் செஞ்.குழுவினரின் அலுவலகம் தாக்கப்பட்டது

### ஆர்ப்பாட்டக்காரர்கள் அட்டகாசம்

திருகோணமலை,ஒக்.3

மூதூர் மத்திய கல்லூரியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தைக் கண்டித்து நேற்றுக்காலை அங்கு நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அலுவலகம் தாக்கப்பட்டது.

இது பற்றிக் கூறப்படுவதாவது:-

மூதூர் மத்திய கல்லூரியின் கணனி அறை இனந்தெரியாதவர்களினால் கடந்த சனிக்கிழமை உடைக்கப்பட்டு அங்கிருந்த கணனிகள் களவாடப்பட்டிருந்தன.

இதைக் கண்டித்து நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. ஊர்வலத்தில் சென்றோர் மூதூர் கலாசார மண்டபத்துக்கு அருகில் அமைந்துள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அலுவலகத்துக்குள் புகுந்து அங்குள்ள உடைமைகளைச் சேதப்படுத்தினர். அத்துடன் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லாண்ட்றோவர் வாகனங்களையும் அடித்து நொருக்கியுள்ளனர். (உ-3)

## தென்மராட்சி கிழக்கிலிருந்து 10,000 பேர் வெளியேறினர்

யாழ்ப்பாணம்,ஒக்.3

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் தொடர்ந்து நிலவும் யுத்த சூழ்நிலை காரணமாக அங்கிருந்து பாதுகாப்புத் தேடி வெளியேறும் பொதுமக்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்த வண்ணம் உள்ளது.

நேற்றுக் காலை முதல் மாலை வரை சுமார் 797 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 26 பேர் இவ்வாறு வடமராட்சிப் பகுதிக்கு வந்து சேர்ந்ததாக வடமராட்சிச் செய்திகள் தெரிவித்தன.

இவ்வாறு நேற்று இடம்பெயர்ந்து வந்தவர்களில் பலர் கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் கல்லூரி, துன்னாலை பூதவராயர் த.க.பாடசாலை, நாவலர்மடம் நாவலர் பாசாலை போன்றவற்றில் தங்கவைக்கப்பட்டனர்.

இன்னும் சிலர் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இதேவேளை-

நேற்று வரை - கடந்த சில தினங்களுக்குள் - சுமார் பத்தாயிரம் பேர் இவ்வாறு தென்மராட்சி கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்து வடம

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

**நாகம்மஸ்**
(சுன்னாகம்)
விஜய், சிம்ரன், மணிவண்ணன்
நடிப்பில்
**துள்ளாத மனமும் துள்ளும**
(ரீலஸ்)
காட்சிகள்: 11.00,2.30 (பு.நே.)
(79016)

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
கார்த்திக், ரோஜா, அஜித்
மற்றும் பலரின் நடிப்பில்
**உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்**
காட்சிகள்: 10.30,2.00 (பு.நே)
(C/12920)


# புலிகள் தரப்பில் 15பேர் மரணம்

வவுனியா,ஒக்.3

ஓயாத அலைகள்-4, நடவடிக்கையின்போது தமது தரப்பில் உயிரிழுந்த மேலும் பதினைந்துபேரின் பெயா விவரங்களை விடுதலைப் புலிகள் தமது 'புலிகளின் குரல்' வானொலி மூலம் நேற்று வெளியிட்டனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

தமிழ்வீரன் (கறுப்பையா தவநேசன்-ஆனையிறவு), கவிப்பிரியா அல்லது எழிலரசி (இராசையா ரஜீஸ்வரி- யாழ்ப்பாணம்), தனிக்கொடி (நாகராசா சாந்தி - யாழ்ப்பாணம்), தேவி (தனபாலசிங்கம் சிவாஜினி- வவுனியா), இளந்தென்றல் (சிதம்பரம் கணேஸ்வரன் - கிளிநொச்சி), முத்தரசன் (பாலசாமி விஜயகுமார்- முல்லைத்தீவு), விதுலன் (சுப்பிரமணியம் சற்குணராஜா-கிளிநொச்சி), நேயமுத்து (பாலகிருஷ்ணன் ஜினிந்தன் - கிளிநொச்சி), எரிமலை (தேவதாஸ் தேவகுமார்-கண்டி), இனியவள் அல்லது தமிழ்புலி (தேவதுரை சாந்தினி-யாழ்ப்பாணம்), கப்டன் இளமங்கை (குமாரசாமி ஜீவகுமாரி- யாழ்ப்பாணம்), லெப்டினன்ட் ஆரதி (நாராயணன் ராணி- யாழ்ப்பாணம்), ஈழுவேங்கை (அமிர்தராணி மடுராணி -மன்னார்), பவநீதன் (செபஸ்ரியான் சன்ரான் குருஸ் மன்னாரர்), சிறப்பு எல்லைப்படைவீரர் தம்பி (சிவசிதம்பரம் சிவாஸ்கரன் - யாழ்ப்பாணம்). (உ-8)

## நவிண்டிலில் தேடுதல்

சாவகச்சேரி,ஒக்.3

வடமராட்சிப் பகுதியில் நவிண்டில், பொலிகண்டி, கொற்றாவத்தைப் பகுதிகள் படையினரால் நேற்றுச் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. இத்தேடுதலின் போது மக்களின் அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்பட்டன. (3-31)

## மாணவர் விவரம் சேக்ரிப்பு

கடந்த வருடங்களில் ஐந்தாம் தர புலமைப் பரீட்சையில் சித்தி பெற்று சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களின் விவரங்கள் கல்லூரியினால் திரட்டப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்வினால் தற்போது வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் இந்த மாணவர்கள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும், இணுவில் மத்திய கல்லூரியிலும் இயங்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் உடனடியாக பெயர்களைப் பதிவு செய்யுமாறு கல்லூரி அதிபர் இ.கயிலைநாதன் கேட்டுள்ளார்.(3-117)

## பரிசளிப்பு

இணுவில் மத்திய கல்லூரியின் கல்லூரித் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு கல்லூரி திறந்தவெளி அரங்கில் அதிபர் துரைஎங்கரசு தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் யாழ்பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் செ.பாலச்சந்திரன் பிரதம விருந்தினராகவும்,யாழ்ப்பாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை பொறியியலாளர் இரா.நடராசா சிறப்பு விருந்தினராகவும், சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் இ.கயிலைநாதன், ஸ்கந்தவரோதயக கல்லூரி ஆசிரியர் ஆறு.திருமுருகன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். பரிசில்களை திருமதி சத்திய லட்சுமி பாலச்சந்திரன் வழங்குவார். (உ-ரி)


**நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் -2000**

**ஜனநாயக இடதுசாரி முன்னணி**

* யுத்தத்தால் அழுக்கப்பட்டு வரும் தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் கோரிக்கைகளை வென்றெடுக்க
* விவசாயிகள் – உழைக்கும் மக்களின் அவல வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்க
* கரையோர மக்களின் கடற்தொழிலாளர்களின் துயர் வாழ்வு போக்கிட
* தொழிலாளி வர்க்கத்துக்கு மறுக்கப்பட்டுவரும் உரிமைகளுக்காக குரல் கொடுக்க
* ஒடுக்கப்பட்ட மக்களின் பின்தங்கிய வாழ்வில் மாற்றங்கள், சமத்துவம் ஏற்படுத்த
* அரசாங்க, தனியார் துறை ஊழியர்கள், பெண்கள், மாணவர்கள் இடர்கள் போக்கிட

வெகுஜன அரசியல் போராளி சி.கா.செந்திவேல் தலைமையிலான போராட்டப் பாரம்பரியம் மிக்க கம்யூனிஸ்ட் இடதுசாரி சக்திகளுக்கு வாக்களியுங்கள்!


சி.கா.செந்திவேல்
முதன்மை வேட்பாளர்
இல. 7


சட்டத்தரணி எல்.எல்.பி.
சோ.தேவராஜா
இல. 12
(78913)



**அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்**
நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் - 2000
யாழ். மாவட்டம்


தமிழினத்திற்காய் தன்னுயிர் நீத்த
அமரர் மாமனிதர்
குமார் பொன்னம்பலம்

2 X


அப்பாத்துரை
விநாயகமூர்த்தி
சட்டத்தரணி, தலைவர்,
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்.

"தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா"




நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்
2000-10-10
யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்
தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளரான
தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்
திரு.சி.சிவமகாராசா
அவர்களை ஆதரியுங்கள்.
இல. 11


**தமிழர் விடுதலைக் கூட்டணி** X

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| X11 | 12 | | | | | | | | |

உதயசூரியன் சின்னத்துக்கு நேரே புள்ளடியிட்டும் இலக்கம் 11க்கு மேலே புள்ளடியிட்டும் வெற்றிபெறச் செய்வதுடன் மேலும் விரும்பிய இரு இலக்கத்திற்கு மேல் புள்ளடியிடலாம்.
(78916)



**சுயேச்சைக்குழு - இல.3 (ஸ்ரீ ல.சு.கட்சி)**


14
திரு. வேல்முருகு தங்கராசா
(அ.இ.ச.நீதிவான்)
(ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழு உறுப்பினர், யாழ்.மாவட்ட ஸ்ரீலங்கா சு.கட்சி பிரதம அமைப்பாளர்.)
X


மனித நேயர்
குமாரசுவாமி விநோதன்
உங்கள் இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்வோம்
அவலத்தில் உழலும் எமது நிலையை அழுத்தி அரசுக்கு உணர்த்தவல்ல அதிகாரம் எமக்கு கிடைக்க அளித்திடுவீர் உமது வாக்குகளை தொலைபேசிக்கே!


2
திரு. ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி
(அ.இ.ச.நீதிவான்)
(யாழ்.இடைக்காடு மகாவித்தியாலய பழைய மாணவன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதம அமைப்பாளர், கோப்பாய்த் தொகுதி, கொழும்பு தமிழ்ச் சங்கக் கல்விக்குழுச் செயலாளர்)
(78912)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் ஆறுமுகம் கமலநாதன்**
(முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)

தோற்றம் 22-12-1939 | திதி:03.10.2000 | மறைவு 15-10-1999

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்திச் சென்று ஆண்டு ஒன்று ஆகிவிட்டது. ஆறாதையா எம்மனம். நீறுபூத்த நெருப்பாக கொதிக்குதையா எம் இதயம், ஆறாக ஓடும் எம் கண்ணீர் காயவும் மாட்டாது, ஓயவும் மாட்டாது. வா என்று கூப்பிட்டால் வர மாட்டீர்கள் என்று நாம் ஓவென்று கதறியழுகின்றோம். எமக்கு நல்லறிவூட்டி நல்வழி காட்டி நின்ற கலங்கரை விளக்கமே! பாசத்தின் அணையாத தீபமாய் அன்புக்கு அடையாளச் சின்னமாய் பண்பும் பரிவும் கொண்ட தெய்வமே! அறிவுடன் நேரிய வழி நிற்க உறுதுணையாய் நின்றவரே! கண்ணெதிரே நின்ற உங்கள் முகம் எம் நெஞ்சிலாடுதையா. பொல்லாத காலனால் நீங்கள் காலமாகி வருடம் ஒன்று ஆகிறது ஆறாது எம்மிதயம் நித்தமும் உங்கள் நினைவுடன் வாழும்....

அன்பு - மனைவி,
மருமகன் - சந்திரன்,
மாமா, மச்சான்மார், அக்கா, மச்சாள்மார்,
சகலன்மார், பெறாமக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

*திருமதி சர்வேஸ்வரலலிதா கமலநாதன்,*
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்.*
(79007)

# மமதாவின் பதவி விலகலைத் தடுக்க பிரதமர் வாஜ்பாய் பகீரதப் பிரயத்தனம்!



வாஜ்பாய்

புதுடில்லி,ஒக்.3

இந்திய ரயில்வே அமைச்சர் மமதா பனர்ஜி மற்றும் வெளிவிவகார இணையமைச்சர் அஜித் பாஞ்சா ஆகியோரின் பதவிவிலகல் முடிவுகளை மாற்றுவதற்குப் பிரதமர் வாஜ்பாய் பகீரதப் பிரயத்தனம் எடுத்து வருகிறார்.

பெற்றோலிய விலை உயர்வைக் கண்டித்து அமைச்சர்கள் இருவரும் தமது பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளனர்.

இவர்களின் ராஜினாமாக் கடிதங்களை ஏற்க மறுத்த பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸை கல்கத்தாவுக்கு அனுப்பி மமதா மற்றும் அஜித் பாஞ்சாவை சமாதானப்படுத்த எடுத்த முயற்சி தோல்வியடைந்துள்ளது.

25 வருடங்களாக மேற்கு வங்கத்தில் செல்வாககுப் பெற்றிருந்த இடது கம்யூனிஸ்ட் கட்சியை உள்ளூராட்சித் தேர்தல்களில் மமதா பனர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் படுதோல்வியடைய வைத்திருந்தது.



மமதா பனர்ஜீ

பாரதிய ஜனதாவுடன் மமதாவுக்கு பிணக்கு ஏற்பட்டால் அது ஆளும் கூட்டணியைப் பாதிக்கும். நாட்டின் பொருளாதார நிலையில் பெற்றோலிய விலையுயர்வு தவிர்க்க முடியாத ஒன்று.

இந்நிலையில் ராஜினாமாச் செய்த இருவரையும் சமாதானப்படுத்தி பதவி விலகலை வாபஸ் பெற வைக்கப் பிரதமர் தீவிர முயற்சி எடுத்து வருவதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் மமதா பனர்ஜி மக்கள் ஆதரவை அதிகரிக்கவே ராஜினாமா நாடகம் நடத்துவதாகவும்-

விரைவில் அவர் ராஜினாமாவை வாபஸ் பெறுவார் என்றும் -

பெயர் குறிப்பிட்ட விரும்பாத பா.ஜ.க. தலைவர் ஒருவர் கூறியதாக இந்தியச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. (ஒ-8)

# மதகுருவைக் கொன்ற 13வயதுச் சிறுவனுக்கு ஆயுள் தண்டனை!

## இந்திய நீதிமன்றம் தீர்ப்பு!!

**புவனேஷ்வர்,ஒக்டோபர்3**

**இந்தியாவில் வெளிநாட்டைச் சேர்ந்த கிறிஸ்தவ மதகுருவையும் அவரது மகன்களையும் எரித்துக் கொன்றதற்காக 13 வயதுச் சிறுவனுக்கு நீதிமன்றம் ஆயுள்தண்டனை வழங்கியுள்ளது.**

குஜராத் மாநிலம் மனோகர்பூரில் தங்கியிருந்து மதப் பணிகளில் ஈடுபட்ட ஆஸ்திரேலியக் கிறிஸ்தவ மதகுரு கிரஹாம் ஸ்டூவர்ட் ஸ்டெயின்ஸ் என்பவரையும், அவரது சிறுவயது மகன்கள் இருவரையும் கடந்த ஆண்டு ஜனவரி 22ஆம் திகதி இரவு அவர்களது காருக்குள் அடைத்து உயிருடன் எரித்துக் கொன்றதாக 14 பேர் மீது மத்திய புலனாய்வு அமைப்பு வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் சுதர்சன் ஹன்சா என்ற சிறுவனுக்கு 13 வயதே ஆகியிருந்ததால், அவர் மீதான 'விசாரணை தனியே நடத்தப்பட்டது.

விசாரணைகளின் முடிவில் சிறப்புத் தனி நீதிமன்றம் குற்றவாளியான சிறுவன் சுதர்சன் ஹன்சாவுக்கு ஆயுள்தண்டனை அளித்துள்ளது.

மதவெறி காரணமாகவே இந்தக் குற்றச்செயல் நடந்துள்ளதாகத் தெரிவித்த நீதிபதி சுதர்சன் இளம் குற்றவாளிகள் இல்லத்தில் தண்டனைக் காலத்தைக் கழிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட மற்றவர்கள் மீதான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (ஒ)

# கல்யாண மண்டபம் இடிந்ததில் மணமகள் உட்பட 42 பேர் பலி!

பெஷாவர்,ஒக்.3

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதிக் கிராமமான மாஞ்சியில் திருமண விழா நடைபெற்றுக் கொண்டிருந்த கட்டடம் இடிந்து விழுந்ததில் மணப்பெண் உட்பட 42 பெண்களும் குழந்தைகளும் உயிரிழந்தனர்.

மண் மற்றும் மரத்தாலான இந்தக் கட்டடத்தின் உள்ளே பெண்கள் மட்டும் பங்கேற்கும் திருமணச் சடங்கு நடைபெற இருந்ததால் மணமகன் உட்பட ஆண்கள் அனைவரும் கட்டடத்தை விட்டு வெளியேறி வெளிப்புறத்தில் அமர்ந்திருந்ததாகவும் -

அப்போது கட்டடம் இடிந்து விழுந்ததால் மணமகள் உட்பட 42 பெண்களும் குழந்தைகளும் இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்ததாகவும் கூறப்படுகிறது.

சமதளமாக இருந்த கட்டடத்தின் கூரைப்பகுதியில் பலர் நடமாடியதாலேயே கட்டடம் இடிந்து விழுந்ததாகக் கூறப்படுகிறது.(ஒ-8)

## யூகோ.வில் அதிபரின் கட்சி அமோக வெற்றி!

யூகோஸ்லாவிய நாடாளுமன்றத் தேர்தலில் அதிபர் சொலோ பொடான் மிலோசவிக்கின் சோசலிஸ்ட் கட்சி தலைமையிலான கூட்டணி அதிக இடங்களில் வென்று பெரும்பான்மைப் பலம் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## நேற்று காந்தியின் பிறந்த நாள்

புதுடில்லி,ஒக்.3

மகாத்மா காந்தியின் 131 ஆவது பிறந்த தினமான நேற்று புதுடில்லி ராஜ்காட்டில் உள்ள காந்தி சமாதியில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட பல தலைவர்கள் மறைந்த தேசபிதாவுக்கு அஞ்சலி செலுத்தினர். (ஒ)

## அடுத்த ஒலிம்பிக் ஏதென்ஸில்


சிட்னி,ஒக்.3

ஆஸ்திரேலியாவில் நேற்று முன்தினம் முடிவடைந்த ஒலிம்பிக் போட்டிகளின் நிறைவுநாள் நிகழ்ச்சியின் முடிவின்போது, 2004ஆம் ஆண்டில் கிரேக்கத்தின் ஏதென்ஸ் நகரில் நடைபெறவுள்ள அடுத்த ஒலிம்பிக் போட்டிகளில் விளையாட்டு வீரர்களைப் பங்குபற்றுமாறும் பார்வையாளர்களை போட்டிகளை கண்டுகளிக்க வருமாறும் கிரேக்கப் பிரதிநிதிகள் அழைப்பு விடுத்தனர்.

உலக அரங்கில்

## உலக உளநல நாள் ஒக். 10 — நலம் தரும் நடவடிக்கைகள்

### 3. நண்பரோடு தொடர்பைப் பேணுதல்



நாம் தனித்திருந்து பிரச்சினைகளோடு போராட வேண்டியதில்லை. துன்பங்கள் வரும் வேளைகளில் நண்பர்கள் கை கொடுப்பர்.

நண்பரோடான உறவைப் பேணுங்கள்.

# ஆயுத பேர ஊழலைத் தடுக்க இந்தியாவில் புதிய நடைமுறை!

## பெர்னாண்டஸ் அறிவிப்பு!!



ஜோர்ஜ் பெர்னாண்டஸ்

புதுடில்லி,ஒக்.3

இந்திய ராணுவத்துக்கு ஆயுதங்கள் வாங்குவதில் ஊழல்கள் இடம்பெறுவதைத் தடுக்க புதிய நடைமுறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

இந்திய பாதுகாப்புத்துறைக்கான ஆயுத பேரங்களில் ஊழலைத் தடுக்கவும், ஒளிவு மறைவற்ற தன்மையைப் பேணவும், ஆயுதங்கள் வாங்குவது உட்படப் பாதுகாப்புத்துறை ஈடுபடும் அனைத்துப் பேரங்களும், தலைமை ஊழல் கண்காணிப்பு ஆணையாளர் பரிசீலித்த பின்னரே நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பெர்னாண்டஸ் கூறியுள்ளார்.

இராணுவத்துக்கு ஆயுதங்கள் வாங்குவதில் பல கோடி ரூபா ஊழல் நடப்பதாகவும், தரகுப் பணமாகப் பெரும் தொகைகள் கைமாறுவதாகவும் கடந்த காலங்களில் எழுந்த குற்றச்சாட்டுக்களை அடுத்தே இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.(ஒ-8)

# தமிழ் நாட்டின் விடுதலைக்கு போராடுவதாக வீரப்பன் அறிவிப்பு!

## நெடுமாறனுக்கு ஒலிநாடாவில் செய்தி

தமிழ்நாட்டின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடப்போவதாக சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பன் தனக்கு அனுப்பியுள்ள ஒலிநாடாவில் கூறியுள்ளதாகத் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

வீரப்பன் அனுப்பிய ஒலிநாடா குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

வீரப்பன் தற்போது தமிழ் நாட்டு விடுதலைப் போராளியாக தான் மாறிவிட்டதாகவும் -

நடிகர் ராஜ்குமாரைக் கடத்திய தன் மூலம் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்களை மீட்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளதாக நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

ஒலிநாடாவில், ராஜ்குமார் கடத்தல் விவகாரம சுமுகமாக முடிவதும் அல்லது வேறு விதமாக முடிவதும், தமிழக, கர்நாடக மாநில அரசுகளின் கையில்தான் உள்ளது என்று வீரப்பன் தெளிவுபடுத்தியுள்ளதாகவும் இந்திய நீதித்துறை, பொலீஸ் துறை மற்றும் அரசமைப்பை வீரப்பன் கடுமையாகக் குற்றஞ்சாட்டியுள்ளதாகவும் -

அறிக்கையில் நெடுமாறன் தெரிவித்துள்ளார். (ஒ-8)

# பலஸ்தீனர்-இஸ்ரேலியர் இடையே மேற்குக் கரையில் தொடரும் மோதல்; இருதரப்பும் பரஸ்பரம் குற்றச்சாட்டு!

காஸா,ஒக்.3

மேற்குக கரைப்பகுதியில் பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியப் படைகளுக்கும் இடையேயான மோதல்களில் உயிரிழந்த பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 36ஆக உயர்ந்துள்ளது.

இதே சமயம அங்கு ஏற்பட்டுள்ள பதற்ற நிலைக்கு இருதரப்பும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் முகமூடி அணிந்த பலஸ்தீன இளைஞர்களுக்கும் இஸ்ரேலியப் பொலீஸாருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 11பேர் உயிரிழந்ததாகவும் -

நேற்று நடந்த மோதல் சம்பவங்களில் 12 பலஸ்தீனர்கள் இறந்ததாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் ரமாலா நகரில் யஸீர் அரபாத் தலைமையில் இடம்பெற்ற பலஸ்தீன அதிகார சபையின் ஆலோசனைக் கூட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில்-

இஸ்ரேல் படையினர் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் -

கலவரப்பகுதிகளில் இருந்து துப்பாக்கி தாங்கிய இஸ்ரேல் படைகள் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் ஸ்லோமடன் அமி செய்தியாளரிடம் பேசுகையில் அரபாத் அவருடைய ஆள்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்றும் -

மோதலை நடத்த வேண்டும் என்ற எண்ணம் இஸ்ரேலியப் படைகளுக்கு இல்லை என்றும் - தெரிவித்துள்ளார்.

சில தினங்களின் முன்னர் யூதர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் புனிதத் தலமாகக் கருதப்படும் மலைக் கோவிலுக்கு இஸ்ரேலிய எதிர்க்கட்சித்தலைவர் ஏரியல் ஷெரோன் சென்று திரும்பியதிலிருந்து அப்பகுதிகளில் பலஸ்தீனர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள கலவரத்தில் இதுவரை பலர் கொல்லப்பட்டபோதும் மோதல்கள் தொடர்கின்றன. (ஒ-8)




சுரேஸ் பிரேமச்சந்திரன்

தமிழ் மக்களை வதைக்கும் யுத்தத்தையும்
அவசரகாலச் சட்டத்தையும் இல்லாதொழிக்க
தோடம்பழச் சின்னத்துக்கு வாக்களியுங்கள்

| | | |
|---|---|---|
| சுயேச்சைக் குழு - 1 | (தோடம்பழச் சின்னம்) | X |
| எஸ். தங்கேஸ்வரன் | இல. | 12 |

ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஸ் தலைமை)



எஸ். தங்கேஸ்வரன்
இல:- 12

(78903)

# வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி மேற்கு நாவலடி ஒழுங்கை என்னும் முகவரியில் அமைந்துள்ள ஒரு பரப்புக் காணியும் நல்ல நிலையில் உள்ள வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:-

ச. ஞானேந்திரன்
இல. 10, பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.

(78975)

# பயிலுநர் ஆசிரியர்களுக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்குமான கூட்டம்

தொண்டர் ஆசிரியர்கள் 04—10—2000 புதன் கிழமை காலை 10 மணிக்கும் பயிலுநர் ஆசிரியர்கள் 07—10—2000 சனிக்கிழமை காலை 10 மணிக்கும் ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் நடைபெறவுள்ள கூட்டத்துக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு:

குறிப்பிட்ட பகுதியினர் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட இடத்தில் மட்டும் சந்திக்கவும்.

தொண்டர் ஆசிரியர் சங்கம்,
யாழ். மாவட்டம்.

(79013)

# இதய அஞ்சலி

எமது சக மாணவன்
இரத்தினகாந்தன் அவர்களின்
அன்புத் தந்தை

## மயில்வாகனம் வீரசிங்கம்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்ததுடன், அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். பல்கலைக் கழக
கடல்வள டிப்ளோமா முதலாம் அணி,
மாணவர்கள்

(13174)

# மரண அறிவித்தல்கள்

## சின்னப்பா சின்னத்தம்பி

(குழக்கா – கைதடி கிழக்கு)

கைதடி கிழக்கைச் சேர்ந்த சின்னப்பா சின்னத்தம்பி அவர்கள் 01-10-2000 ஞாயிற்றுக்கிழமை இரவு சுழிபுரத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கமுத்துவின் அன்புக் கணவரும், மகேஸ்வரியின் அன்புத் தந்தையும், தி. குணராசசிங்கத்தின் அன்பு மாமனாரும், சுமங்கலி, குகனேசன் (2002 வர்த்தகப் பிரிவு, யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(2-10-2000) திங்கட்கிழமை சுழிபுரத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. குணராசசிங்கம்
(மருமகன்)

கம்பனை அம்மன் வீதி,
(தபாற்கந்தோர் அருகில்),
சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

(79011)

## வேலுப்பிள்ளை செந்தில்நாதன்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், மாகியப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செந்தில்நாதன் அவர்கள் நேற்று முன்தினம் (1 - 10 - 2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை—அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், ஜீவரஞ்சிதமலரின் அன்புக் கணவரும், சந்திராதேவி, தில்லைநாதன் (சுவிஸ்), சுகந்தி, சசிகலா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் மகேஸ்வரன், சந்திரகுமாரி, ஜெகநாதன் ஆகியோரின் மாமனாரும் லோகிதா, பிரசன்னா, றாஷிகா, தாரணி (சுவிஸ்), துவாரகன் (சுவிஸ்), டர்ஷிகா, அனுஷிகா ஆகியோரின் பேரனும் பாக்கியநாதன், பரமநாதன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (2 - 10 - 2000) திங்கட்கிழமை மாகியப்பிட்டி மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. தவக்குமார்
(சகலன்)

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

(79014)

# நாளை நடப்பவை

சண்டிலிப்பாய், ஒக். 3

கோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலையம் சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்திய பேச்சுப் போட்டியின் பரிசளிப்பு வைபவம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

(க–135)

★ ★ ★

சண்டிலிப்பாய், ஒக். 3

மாதகல் காந்திஜி சனசமூக நிலையம் நடத்தும் பாலர் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு நடைபெறும்.

நிலையத்தலைவர் சி. சுந்தரேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம அதிதியாக வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்ஸ்சனும், கௌரவ விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் மு. பாலசிங்கம், மானிப்பாய் பிரிவு முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவர் திருமதி எஸ். பூமணி, 'போரூட்' நிறுவன சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி கே. சுகந்தி, மாதகல் கிழக்கு கிராம அலுவலர் வி. துரைராசா ஆகியோரும் கலந்து கொள்வர்.

(க–135)

# தபால் நிலையம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக். 3

அண்மைக் காலத்தில் குடாநாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையை அடுத்து செயற்படாதிருந்த பாஷையூர் தபால் நிலையம் யாழ்ப்பாணம் குருசோ வீதியில் உள்ள கட்டடத்தில் இன்று தொடக்கம் தற்காலிகமாக இயங்கவுள்ளது.

பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் இந்த தபால் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தபாலதிபர் தெரிவித்துள்ளார். (க-10)

# ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்குப் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி, ஒக். 3

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளைச் சேர்ந்த ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான தொடருறு ஆசிரியர் கல்வி வேலைத் திட்டத்தின் கீழான பயிற்சி வகுப்புகள் இன்று முதல் எதிர்வரும்6 ஆம் திகதி வரை நான்கு நாள்கள் கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் வலய அலுவலகத்தினால் நடத்தப்படவுள்ளன.

நாளை ஆரம்பக் கல்வி வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் ஏனைய நாள்களில் ஆரம்பக் கல்வியில் ஏனைய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

ஒரு பாடசாலையிலிருந்து ஒவ்வொரு பயிற்சிக்கும் ஒரு ஆசிரியர் வீதம் கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா கேட்டுள்ளார்.

(க–117)

# சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், ஒக். 3

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

ஆலய உற்சவ காலத்தில் தினமும் மாலை 5.30மணிக்கு எஸ். கே. என். தவராஜா 'பகவத்கீதை' என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றிவருகின்றார்.

உற்சவ நிகழ்வில் எதிர்வரும் 7ஆம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-15)

# இளைஞருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக். 3

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மிருசுவில் பகுதியில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டுக் காங்கேசன்துறை தடை முகாமில் மேலதிக விசாரணைகளுக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் காங்கேசன்துறை பொலிஸாரால் யாழ். நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

மிருசுவில் தெற்கைச் சேர்ந்த வல்லிபுரம் கருணாகரன் என்பவரே யாழ். மாவட்ட நீதிவான் ஆர். ரி. விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டவராவார்.

சந்தேக நபரை அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். [உ-9-ரி)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி துரைராசா செல்லம்மா

தாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா செல்லம்மா அவர்கள் நேற்று (2 - 10 - 2000) திங்கட்கிழமை காலமானார்.

இவர் துரைராசாவின் அன்பு மனைவியும், இராமுப்பிள்ளையின் அன்புச்சகோதரியும், பாலசுப்பிரமணியத்தின் மாமியாரும், சாளினி, துஷாந்தினி, தயாபரன், யாழினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (3-10-2000) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11. 00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இராமுப்பிள்ளை
(சகோதரன்)

தாவடி வடக்கு,
தாவடி.

(சி/13178)

## முத்துக்குமாரு சபாரத்தினம்

(முன்னாள் R. V. D. P. பிரதம லிகிதர் உடவளவை, நுணாவில் கிழக்கு கற்குளி கந்தசாமி கோயில் நிர்வாக சபைத் தலைவர்)

நுணாவில் மத்தியைச் சேர்ந்த முத்துக்குமாரு சபாரத்தினம் 1-10-2000 அன்று துணுக்காயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு – சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகனும், மகேஸ்வரி (ஓய்வுபெற்ற நெசவு மேற்பார்வையாளர்)யின் அன்புக் கணவரும், பாஸ்கரன் (பிரான்ஸ்), சூரியகலா (கொழும்பு), பிரபாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத தந்தையும், காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் லீலாவதி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்புச் சகோதரரும். தேவராசா (உரிமையாளர் — திவ்வியா எலெக்ரோனிக்ஸ் கொழும்பு), அன்பு மாமனாரும், திவ்வியாவின் அன்புப் பேரனாரும் காலஞ்சென்ற சதாசிவத்தின் மைத்துனரும் காலஞ்சென்ற துரையப்பா திருமதி துரையப்பா மகேஸ்வரியின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின்இறுதிச் சடங்குகள்நேற்று(2-10-2000) திங்கட்கிழமை N. காசிநாதன், ''கனகபவனம்'' துணுக்காய் சந்தி, துணுக்காய் இல்லத்தில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திரு. T. தேவராசா (மருமகன்)
A-6-F43, புளுமெண்டல் பிளாற்ஸ்,
கொழும்பு-13
T.P 330337

தகவல்:-
S.A. விக்னகுமார்,
(மருமகன்)
''குமரகிரி''
கல்லடிவேலன்,
நுணாவில்-கிழக்கு,
சாவகச்சேரி.

தற்காலிகமுகவரி:
சங்கரத்தை சந்தை அருகில்,
பிரதான வீதி,
வட்டுக்கோட்டை.

(79002)

## திருமதி நாகமுத்து மீனாட்சி

கோட்டைக்காடு, மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி நாகமுத்து மீனாட்சி அவர்கள் நேற்று (02-10-2000) திங்கட்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அரியமுத்து, செல்லமுத்து, சரவணமுத்து, தம்பிமுத்து, முருகேசு மற்றும் இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கமலாதேவி, கருணாமூர்த்தி, சந்திராதேவி, கணேசமூர்த்தி (ஜேர்மனி), புஸ்பலீலாதேவி, தெட்சணாமூர்த்தி, பவானிதேவி (கொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணசேகரம், தேவராசா, நடராசா (சிமெந்துக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை), சோதி வடிவேல் (கொலண்ட்), சரஸ்வதி, கோகிலா (ஜேர்மனி), தேவநாயகி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(3-10-2000) செவ்வாய்க்கிழமை பி.ப. 2. 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் தொந்தனை மயானத்திற்குத் தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. கருணாமூர்த்தி (மகன்)
நா.தெட்சணாமூர்த்தி(மகன்)
த. நடராசா (மருமகன்)

கோட்டைக்காடு,
மல்லாகம்.

(79017)

உதயன்

## சரியான அவதானிப்பு

தமிழ்ப் பிரதேசங்களை விட, சிங்களப் பிரதேசங்களிலேயே, தேர்தல் பிரசாரம், பொறி பறக்க நடைபெறுகிறது. மாற்றுக் கட்சிகள் மீதும் வேட்பாளர்கள் மீதும் சேறு பூசும் பிரசாரமும் அங்கேயே சூடேறி உள்ளது. அதே போன்று சுவரொட்டி ஒட்டுதல், கொடிகட்டுதல் ஆகியவற்றின் போது மாற்றுக்கட்சி ஆதரவாளர்கள் முட்டி மோதி அடிபட்டுக் கொள்வதும் சாவதும் தெற்கில் தான் அதிகம்! தேர்தல் வன்செயல்களும் தென்னிலங்கை மாவட்டங்களில் நாளாந்தம் அதிகரித்து வருவதையும் காண்கின்றோம்.

தேர்தற் கலகலப்பும் தீவிரமும் அங்கு களைகட்டிய போதிலும், வாக்குகளை வாங்குவதற்காக எதனையும் பேசலாம் என்ற தன்மையுடன் அரசியல்வாதிகள் வாயில் வந்ததை எல்லாம் பேசுகிறார்கள். 'யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு' என்ற திருக்குறளை படியாததாற் போலும், நாக்கைக் கண்டபடி சுழற்றுகிறார்கள்; விஷமும் கக்குகிறார்கள். தாம் பேசுவதன் அர்த்தம் என்ன என்பதனைக் கூட தேர்ந்து கொள்ளாமல் மூத்த அரசியல்வாதிகளே பேசுகிறார்கள். சில்லறைத் தனமான, சின்னத்தனமான பரப்புரைகளையே கேட்கும் தலைவிதி அங்குள்ள வாக்காளர்களுக்கு!

அவை எல்லாம் ஒரு புறமிருக்க, நாட்டின் தீயாக எரிந்து கொண்டிருக்கும் போரைநிறுத்துவது பற்றியோ, அதற்கு மூலகாரணமான இனப்பிரச்சினையைத் தீர்ப்பது குறித்தோ தெற்கின் பெரும்பாலான அரசியல் கட்சிகளுக்கு அக்கறை இருப்பதாகத் தெரியவில்லை. அவற்றின் தேர்தல் பரப்புரைகள் அதனை எள்ளளவும் பிரதிபலிக்கவில்லை.

இது விடயத்தில் ஏனைய கட்சிகளைப் புறந்தள்ளி விட்டு நோக்கினும், ஆட்சி அமைக்க கூடிய இரண்டு பிரதான கட்சிகளேனும் - பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டு பிரதான கட்சிகளேனும் - போரை நிறுத்துவதற்கும் இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு ஒன்றைக் காண்பதற்கும் வாக்காளர்களின் ஆதரவைத் திரட்டுவதில் அக்கறை காட்டவில்லையே!.

ஆளுங்கட்சியாக இருந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பௌத்த குருமாரின் ஆதரவையும், பேரினவாதிகளின் ஆதரவையும் பெற்றுவிட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் மட்டுமே தனது பிரசாரங்களை நடத்தி வருகிறது. அவர்களைத் திருப்திப்படுத்தும் - மகிழ்சியுறச் செய்யும் - வகையில் போரையும், புலிகளையும் பிரபாகரனையும் முன்னிறுத்தியே பிரசாரம் செய்கிறது. போரை முதன்மைப்படுத்தியே அதன் பிரசார உத்தி அமைந்துள்ளது.

இது விடயத்தில் தாமும் சளைத்தவர்கள் அல்லர் என்று காட்டிக் கொள்ளும் வகையில், தேர்தல் பரப்புரையை முடுக்கிவிட்டிருக்கின்றனர் ஐக்கிய தேசியக் கட்சியினர்.

ஒட்டு மொத்தத்தில் தென்னிலங்கை புத்தி ஜீவிகள் கூட்டிக் கழித்துக் கூறியிருப்பது போல, சரியாக அவதானித்து இரண்டு பிரதான கட்சிகளுமே இனப்பிரச்சினை என்ற பெரும் விவகாரம் ஒன்றுள்ளது - அதுதான் நாட்டின் முக்கியமான பிரச்சினை, முதன்மைப் பிரச்சினை - என்பதனை மறந்து வாக்குப் போதை தலைக்கேறிய நிலையிலேயே தங்கள் பிரசாரங்களைச் செய்து வருகின்றன.

சொல்வது ஒன்று செய்வது வேறொன்று என்ற அரசியல் 'தந்திரத்தை', உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசும் 'உத்தியை' இவை இரண்டும் கையாள்கின்றன என்று சிலர் கருதக்கூடும். ஆனால் தேர்தல் முடிந்த பின்னர் அத்தகைய தந்திரமும் உத்தியும் 'பூமராங்' போன்று அவர்களையே மீண்டும் சென்று குத்தும் என்பது நிச்சயம்!.

ஒரு கட்சி தனித்து ஆட்சி அமைக்க முடியாத தொங்கு நாடாளுமன்றமே அமையும் என்பது அரசியல் அவதானிகளின் மதிப்பு. அப்போது வடக்கு - கிழக்கில் இருந்து செல்லும் எம்.பிக்கள் யார் பக்கம் சேரப் போகிறார்கள்? இனப்பிரச்சினைகளைக் குறித்துச் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறாத - வாக்குகளைக் கேட்காத - பிரதான கட்சிகளின் பின்னால் தொங்கிக் கொள்ள இப்போதே அவர்கள் ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து மனப் பாடமாக்க வேண்டும்! என்ன இது, அவர்களுக்கு இதுதான் கைவந்த கலையாச்சே!

# முதியோர் எண்ணிக்கை 2020இல் இலங்கையில் இரண்டு மடங்காகும்

## 'ஹெல்பேஜ்' அமைப்பின் தலைவர் தகவல்

உலகில் மொத்த சனத்தொகையில் 60 கோடி பேர் 60 வயதுக்கு மேற்பட்ட முதுமைப் பருவத்தை அடைந்தவர்களாவர். 2050 ஆம் ஆண்டளவில் இந்த எண்ணிக்கை 200 கோடியாக உயர்ந்துவிடும். இதில் 53 சதவீதத்தினர் ஆசிய பிராந்தியத்தில் வாழக்கூடியவர்கள். முதியோரைப் பராமரிப்பது அனைவரதும் பொறுப்பாகும். அவர்களைச் சுமையாகக் கருதவேண்டாம்.

இவ்வாறு முதியோர்களைப் பராமரிக்கும அமைப்பான 'ஹெல்பேஜ்' அமைப்பின் தலைவர் எச்.பி.குணரத்தன தெரிவித்தார்.

சர்வதேச முதியோா தினத்தை முன்னிட்டு மேற்படி அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட செய்தியாளர் மாநாடு அண்மையில் கொழும்பு ரேணுகா ஹோட்டலில் நடைபெற்றது.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அமைப்பின் செயலாளர் டபிள்யு. டீடபிள்யு வீரவர்தன, டாக்டர்.ச.எஸ். தேவசகாயம் உட்பட பலர் கலந்து கொண்டனர். செய்தியாளர் மாநாட்டில் எச்.பி. குணரத்ன மேலும் கூறியதாவது:-

முதியோரைப் பராமரிப்பதில் 'ஹெல்பேஜ்' அமைப்பு கடந்த பல வருடங்களாக குறிப்பிடத்தக்க சேவை ஆற்றி வருகின்றது. இலங்கையில் மொத்த சனத்தொகையில் 10 சதவீதமானவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

2020ஆம ஆண்டளவில 60-70 மற்றும் 70-80 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இவர்களில் பிள்ளைகளால் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்படும் முதியோரை இந்த அமைப்பு சகல வசதிகளையும் வழங்கி பராமரித்து வருகின்றது. அதற்காக நாடெங்கிலும் முதியோர் இல்லங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது.

அதேபோன்று ஒவ்வொரு குழந்தையும் தனது பெற்றோரை முதுமைப் பருவத்தில் வைத்துப் பராமரித்தால் அவர்கள் தெருவில் இறங்கிப் பிச்சைகேட்க வேண்டிய நிலை ஏற்படாது. அவர்களைச் சுமையாகக் கருதக்கூடாது.

இது குறித்து சர்வதேச ரீதியாக விழிப்புணர்வை ஏற்படுத்தவே ஒக்ரோபர் முதலாம் திகதியை ஐ.நா. அமைப்பு சர்வதேச முதியோர் தினமாகப் பிரகடனப்படுத்தியிருக்கிறது.

இப்படி அவர் மேலும் கூறினார்.

(இ-4)

# தேர்தல் சட்ட விதிகளை மீறும் பொலீஸார் மீது கடும் நடவடிக்கை

## பதில் பொலீஸ் மா அதிபர் ஆனந்தராஜா அறிக்கை

கொழும்பு,ஒக்.3

தேர்தல் சட்டங்களை மீறும் பொலீஸாருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் பொலீஸ் மா அதிபர் ரி.ஏ. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

பொலீஸ் தலைமையகத்தில் பிரதிப் பொலீஸ் மா அதிபர்களுக்கு ஏற்பாடாகியிருந்த கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு ஆனந்தராஜா மேலும் கூறியதாவது:-

தேர்தலை நீதியாக நடத்தி முடிப்பதற்குச் சகல பொலீஸாரும் தமது முழுப்பங்களிப்பையும் வழங்க வேண்டும். அத்துடன் தேர்தல் சட்டத்தைப் பேணிப் பாதுகாக்கும் விதத்தில் சகல பொலீஸாரும் செயற்பட வேண்டும். அவ்வாறு நடக்காது சட்டத்தை மீறும் பொலீஸாருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டேன் - என்றார்.

வாக்களிப்பு நிலையங்களில் பணியில் ஈடுபடும் கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அனைவருக்கும் அவரவர்களது பொறுப்புக்கள் குறித்து விளக்குவதற்கு பிராந்திய ரீதியில் கலந்துரையாடல்களை நடத்த வேண்டும் என்று பிரதிப் பொலீஸ் மா அதிபர்களுக்கு பதில் பொலீஸ் மா அதிபர் ஆனந்தராஜா அங்கு வைத்துப் பணிப்புரை விடுத்தார்.

(உ-3-ரி)

# பேரினவாதக் கட்சிகளும், தமிழ்க்கட்சிகளும் எந்த முகத்துடன் வாக்குக் கேட்க வருகின்றன?

## ஜனநாயக இடதுசாரி முன்னணியின் கருத்தரங்கில் கேள்வி

தமிழ் மக்களை அன்றிலிருந்து இன்றுவரை அடக்கி ஒடுக்கி வரும் பேரினவாத ஆளும் வர்க்கக்கட்சிகளும் அவர்களுக்கு நேரடியாகவும் முறைமுகமாகவும் ஆதரவு, அரவணைப்பு வழங்கி வரும் தமிழ்க்கட்சிகளும் எந்த முகத்துடன் தமிழ் மக்களிடம் வாக்குகள் கேட்கின்றன. கறைபடிந்த கைகளோடும் காசுப் பணப் புழக்கங்களுடன் மக்களை ஏமாற்றி வாக்குகள் பெற அவை முயற்சிக்கின்றன. இத்தகைய சக்திகளுக்கு போராட்ட அரசியல் பாரம்பரியம் மிக்க தமிழ் மக்கள் எதிர்வரும் தேர்தலில் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்.

புத்தூர் கலைமதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற தேர்தல் கருத்தரங்கில் உரையாற்றிய ஜனநாயக இடதுசாரி முன்னணியின் முதன்மை வேட்பாளர் சி.கா.செந்திவேல் இவ்வாறு கூறினார்.

நிலையத் தலைவர் கா.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் செந்திவேல் தொடர்ந்து உரையாற்றுகையில், யுத்த நெருக்கடிகளும் அதன் காரணமாக ஏற்பட்ட விவரிக்க முடியாத துன்ப துயரங்களும் நிறைந்த இன்றைய சூழலில் தமிழ் மக்கள் அளிக்கும் வாக்குகள் ஒவ்வொன்றும் மிகப் பெறுமதிமிக்கவை.

கடந்த இருபது ஆண்டுகளில் இடம்பெற்று வந்தவைகளையும் சமகாலப் போக்குகளையும் அரசியல் அடிப்படையில் ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்த்து மக்கள் வாக்களிக்க வேண்டும். தமிழ் மக்களை அடக்கி கொன்றொழித்து பேரினவாத வெறியாட்டம் நடத்தியவர்களை மட்டுமன்றி இன விடுதலையின் பெயரால் சொந்த மக்களை அழிவுகளுக்கு உள்ளாக்கி அரசியல் வனாந்தரத்துக்கு இட்டுச் சென்றவர்களையும் தமிழ்மக்கள் எடைபோட்டுப் பார்த்து வாக்களிப்பது அவசியமானதாகும்.

ஆதலால் தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை உரிமைகளை விலை பேசி விற்காத - அரசியல் அடிவருடித்தனம் புரியாத - நேர்மையான இடதுசாரி சக்திகளுக்கு மக்கள் வாக்களித்து தமிழ் மக்களின் போராட்டக் குரலுக்குப் பலம் சேர்க்க வேண்டும் - என்றார்.

கருத்தரங்கில் உரையாற்றிய சட்டத்தரணி சோ.தேவராஜா, உழைக்கும் மக்களும் ஒடுக்கப்பட்ட மக்களும் ஏனைய கம்யூனிஸ்ட் இடதுசாரி ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைந்து தமது வலிமையான பலத்தை வெளிப்படுத்த எதிர்வரும் தேர்தல் சிறந்த சந்தர்ப்பமாகும்.

யுத்தத்தையும் அதன் கொடூரங்களையும் தடுத்து நிறுத்த பரந்த வெகுஜன இயக்கங்களை முன்னெடுப்பதற்கு உரிய அங்கீகாரமாகவே இந்தத் தேர்தலில் ஜனநாயக இடதுசாரி முன்னணியினராகிய நாம் வாக்குகள் கேட்கின்றோம். அதன் மூலம் அரசியல் கோரிக்கைகளை வென்றெடுக்கும் பாதையில் நாம் உறுதியுடன் செல்ல முடியும் - என்றார்.

# ஈவினையில் துணிகரக் கொள்ளை!

கொக்குவில்,ஒக்.3

வீட்டுக்குள் நுழைந்த கொள்ளைக் கோஷ்டி வீட்டினுள் இருந்தோரை கத்தி முனையில் மிரட்டி தாலிக்கொடி, சங்கிலி, காப்பு உட்பட ஏராளமான தங்க நகைகளையும், பணத்தையும் அபகரித்துச் சென்றது.

இந்தச் சம்பவம கடந்த வியாழக்கிழமை இரவு ஈவினைப் பகுதியில் இடம்பெற்றது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது:

இரவு 9.30 மணியளவில் வீட்டைச்சுற்றி எவரோ நடமாடுவதை ஜன்னல் வழியாக வீட்டில் இருந்த பெண் அவதானித்தார். அதுபற்றி அவர் தனது கணவனிடம் தெரிவித்தார்.

கணவர் வீட்டின் வெளியே சென்று பார்த்துவிட்டு எவரும் இல்லை என்று கூறிவந்து படுத்துவிட்டார். கணவர் படுக்கைக்குச் சென்ற பின்னர் ஒரு தடவை புறத்தேவைக்காக கதவைத்திறந்து வெளி சென்றுவிட்டு வந்து படுத்துக் கொண்டார்.

சிறிது நேரத்தின் பின்னர் அவரின் கழுத்தில் கத்தியை கூச்சல் போடாது இருக்குமாறு ஒருவர் அச்சுறுத்த நான்கைந்து பேர் வீட்டிலுள்ள சகல பொருள்களையும் கிளறி ஆராய்ந்து நகைகள், பணம் என்பவற்றை எடுத்துச் சென்றனர்.

சுமார் மூன்று மணித்தியாலங்கள் வரை திருடர்கள் அங்கு தேடுதல் நடத்தி வீட்டிலிருந்த மா, சீனி, அரிசி, மருந்து வகைகள், உடுபுடைவைகள் அனைத்தையுமே கிளறி அங்குமிங்குமாகப் போட்டிருந்தனர். திருட்டு இடம்பெற்ற சமயம் வீட்டுக்கு வெளியே மற்றும் சில திருடர்கள் இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. அவர்கள் சாப்பிட்ட மாங்காய்கள், புகைத்த பீடிகளின் துண்டுகள் என்பவற்றில் இருந்து குறைந்தது பத்துப்பேராவது இந்தக் கொள்ளையில் ஈடுபட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

(இ-69)

## பங்கீட்டு அட்டைகள் விநியோகம்

நல்லூர்,ஒக்.3

நல்லூர் ஜே-106 கிராம அலுவலர் பிரிவில் உள்ள குடியிருப்பாளர்களுக்கான மீளாய்வு செய்யப்பட்ட 'அ', 'இ' பங்கீட்டு அட்டைகளின் இரண்டாவது கட்ட விநியோகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பகல் 12 மணி வரை இடம்பெறும்.

'உ' பங்கீட்டு அட்டை வழங்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என கிராம அலுவலர் எஸ்.ஜெயக்குமார் தெரிவித்தார்.

(க-111)

### உதயவாக்கு

தர்மத்தைக் காக்கத் தைரியம் வேண்டும். தைரியத்தை இழந்தோமானால், மனைவி மக்களையும் காக்க முடியாது. தர்மத்தைக் காக்க அதை விடவும் தைரியம் வேண்டும். அச்சத்தை அகற்றி அனைத்திலும் விலை உயர்ந்த பொருளாகிய தர்மத்தைக் காப்போமாக!

- ராஜாஜி

## நவராத்திரி நிகழ்வுகள்

கொழும்புத்துறை,ஒக்.3

யாழ். வண்ணார்பண்ணை இளையதம்பி வித்தியாலயத்தில் நவராத்திரி தினத்தை ஒட்டிப் பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு முன்னாள் அதிபர் 'சமூக ஜோதி' கா.கணேசதாசன் 'சக்தி - கலைமகள்' என்ற தலைப்பில் சமயச் சொற்பொழிவாற்றுவார். (க-30)

* * *

கொழும்புத்துறை,ஒக்.3

யாழ்.பிரதேச செயலாளர் பணிமனையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வாணிவிழா பிரதேச செயலாளர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறும்.

வாணி பூசையை அடுத்து சமயச் சொற்பொழிவுகளும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (க-30)

* * *

சண்டிலிப்பாய்,ஒக்.3

மாதகல் பாணாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் கடந்த வியாழக்கிழமை முதல் நவராத்திரி உற்சவம், விசேட அபிஷேகம், நவராத்திரி கொலுபூசை என்பனவற்றுடன் நடைபெற்று வருகின்றது.

விஜய தசமி தினமான எதிர்வரும் 7ஆந் திகதி சனிக்கிழமை மானம்பூ உற்சவம் நடைபெறும். (க-135)

* * *

சண்டிலிப்பாய்,ஒக்.3

சண்டிலிப்பாய சீரணி நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நவராத்திரி உற்சவம் கடந்த வியாழக்கிழமை முதல் தினமும் விசேட அபிஷேகம், கொலுபூசை என்பன நடைபெற்று வருகின்றன. எதிர்வரும 7ஆந் திகதி சனிக்கிழமை மானம்பூ உற்சவம் நடைபெறும். (க-135)

* * *

சண்டிலிப்பாய்,ஒக்.3

பண்டத்தரிப்பு கீரிமலை வீதியிலுள்ள கன்னியர் அம்மன் ஆலயத்தில் நவராத்திரி உற்சவத்தை முன்னிட்டு கடந்த வியாழக்கிழமை முதல் விசேட அபிஷேகம், பொங்கல், பூசை என்பன நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 7ஆந் திகதி மானம்பூ திருவிழா நடைபெறும். (க-135)

* * *

புன்னாலைக்கட்டுவன்,ஒக்.3

புன்னாலைக் கட்டுவன் கணேசா சனசமூக நிலையத்தின வாணி விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும்.

விசேடபூசை, கூட்டுப்பிரார்த்தனை என்பனவும் அன்றைய தினம் இடம்பெறவுள்ளன. (க-133)

* * *

புன்னாலைக்கட்டுவன்,ஒக்.3

உரும்பிராயில் இயங்கிவரும் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தின் வாணிவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

அன்றைய தினம் விசேட பூசை வழிபாட்டுடன் கூட்டுப்பிரார்த்தனை இடம்பெற்றுத் தொடர்ந்து அங்கு பயிற்சி பெறும் இளைஞர், யுவதிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. (க-133)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.3

வடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனம நாளை புதன்கிழமை நவராத்திரி தின விழாவைக் கொண்டாடவுள்ளது. (க)

## வைத்தியர் பற்றாக்குறை

கோப்பாய்,ஒக்.3

கோப்பாய் அரசினர் வைத்திய சாலையில வைத்தியா பற்றாக்குறையினால் நோயாளிகள் சிரமமடைகின்றனர்.

இந்த வைத்தியசாலையில இரண்டு நிரந்தர வைத்தியர்களும ஒரு பகுதி நேர வைத்தியரும் ஒரு பல்வைத்தியருமே கடமையாற்றி வருகின்றனர்.

மேலும் ஒரு மருத்துவரை நியமிப்பதன் மூலம வைத்தியர் பற்றாக்குறையை நீக்கமுடியும் எனத் தெரிவிக்கபபடுகின்றது. இது தொடர்பாக மாகாண சுகாதாரசேவைகள பணிமனைக்கு தெரிவிக்கப்பட்டும இதுவரை வைத்தியர் நியமிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. (இ-72)

### நாளை

புரட்டாதி 18

புதன்கிழமை

*திதி:* ஸப்தமி

பின் இரவு 4.22 வரை.

*நட்சத்திரம்:* மூலம்

முழுவதும்

சரஸ்வதி பூஜாரம்பம்

*சுபநேரம்:* 4.32 - 6.02

*ராகுகாலம்:* 12.02 - 1.32

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# வளர்ந்துவரும் வன்முறை அரசியல் எதிர்கால சமூகத்துக்கு ஆபத்து!

தற்போது நாட்டில் வளர்ந்து வரும் அரசியல் வன்முறைக் கலாசாரத்தால் சமூகத்தில் உருவாகும் பிரச்சினைகள் குறித்து ஆராய்கிறார் கட்டுரையாளர் மயுர சமரக்கோன். இவர் சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் சமூக விஞ்ஞானத் துறையில் மூத்த விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். 'லங்காதீப' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இது.

சிறிலங்காவில் அரசியலைப் பொறுத்தவரையில் வன்முறைகள் முக்கிய இடத்தைப் பெற்று வருகின்றன. தேர்தல் திகதியை அறிவித்தவுடன் தேர்தலில் எந்தக் கட்சி வெற்றி பெறும் அல்லது எந்தக் கட்சி தோல்வியடையும் என்பதிலும் பார்க்க இந்தத் தேர்தல் வன்முறைகளில் எத்தனை பேர் பலியாவர் என்பது குறித்தே பொதுமக்கள் கவலை கொண்டனர்; அக்கறைப் பட்டனர். மேலும் தேர்தல் என்பது பொதுமக்களை அச்சுறுத்தும் காரணியாகவும் அமைந்துள்ளது.

தேர்தலின் போது பொதுமக்களின் வாக்குரிமை குறித்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள் எவ்வளவு தூரம் குரல் எழுப்பியபோதிலும் பொதுமக்கள் அந்த உரிமையைக் கைகழுவி ஒதுங்கியிருக்கும் நிலைமையே உருவாகி உள்ளது. தற்போது தேர்தல் என்பது அரசியல் கட்சிகளின் சண்டித்தனம் மற்றும் வன்முறைகளை உரைத்துப் பார்க்கும் கல்லாக அமைந்துள்ளது. இதனால் நாடெங்கும் சமூகப்பிரச்சினைகளை உருவாக்கும் ஒரு பயங்கர நிலையை அது தோற்றுவித்துள்ளது.

## தேர்தல் வன்முறை வரலாறு

சிறிலங்காவின் தேர்தல் வரலாற்றை அவதானிக்கும்போது இந்தத் தேர்தல் வன்முறைகள் வளர்ந்து வந்த விதத்தைக் கண்டறிய முடியும் . இந்த வன்றைகள் 1970இல் ஆரம்பத்தில் தீவிரமடைந்தது. 1980 ஆரம்பத்தில் வன்முறைகளின் வளர்ச்சி உச்சக் கட்டத்தை அடைந்தது எனலாம். 1983இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் மக்கள் கருத்துக் கணிப்பு போன்ற சந்தர்ப்பங்களின்போது இந்த வன்முறைக் கலாசாரம் ஆரம்பித்ததாகக் கருதமுடியும்.

1987ஆம் ஆண்டில் இருந்து இந்த வன்முறையானது எதிர்த்தரப்பினரைக் கொலைசெய்யும் அளவிற்கு வளர்ந்தது. இந்தக் காலகட்டத்தில் ஜே.வி.பியினரும் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட தேசப் பிரேமிகளும் அரசியல் வன்முறைக் கலாசாரத்தை அரசியல் படுகொலைக் கலாசாரமாக மாற்றினர். ஐ.தே.கட்சியைச் சேர்ந்த பல முக்கியஸ்தர்கள் உட்பட பல அரசியல் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். தேசப் பிரேமிகளின் கொள்கைகளுக்கு உடன்பாடற்ற எவருக்கும் மரணதண்டனை வழங்கப்படும் என்ற அறிவிப்புகள் பொது இடங்களில் ஒட்டப்பட்டிருந்தன. ஜே.வி.பியின் ஆசீர்வாதத்தைப் பெற்ற இந்த தேசப் பிரேமிகளின் செயற்பாடுகளினால் மனிதப் படுகொலைகள் ஒரு சாதாரண விடயமாயிற்று. இறுதியில் ஆட்சியில் இருந்த ஐ.தே.க.அரசாங்கம் படுகொலைக்குப் படுகொலை புரிந்ததன் மூலம் தனது அதிகாரத்தை தக்கவைப்பதில் வெற்றி கண்டது.

வடக்கில் விடுதலைப்புலிகளும் தங்கள் அரசியல் விரோதிகளைப் படுகொலை செய்து இந்தக் கலாசாரம் வளர்வதற்கு பெரும் பங்காற்றினர். அதிகாரத்தில் தொடர்ந்து இருப்பதற்கு அல்லது அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடவேண்டிய தேவை ஏற்பட்டது. அதேபோலவே மிகவும் தீவிரமான விதத்தில் சமூகத்தை அச்சுறுத்தவேண்டும் என்ற எண்ணம் அரசியல் கட்சிகளை இன்றுவரை பீடித்திருப்பதற்குக் காரணம் மேற்குறிப்பிட்ட விதத்தில் அரசியல் வரலாற்றில் பெற்ற பாடம் மிகவும் பயனுள்ளதாக அவர்களுக்கு அமைந்திருப்பதே ஆகும்.

எனவே தான் முக்கிய அரசியல் கட்சிகள் தங்களது வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் போது அந்த வேட்பாளர்கள் எவ்வளவு கல்வியறிவு படைத்தவர்கள் என்பதிலும் பார்க்க எவ்வளவு தூரம் சண்டித்தனத்தில் வல்லவர்கள் என்பது குறித்தே கவனம் செலுத்துகின்றன. அதேபோலவே தற்போது அரசியலில் ஈடுபட்டுள்ள பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் கூட தமது ஆதரவாளர்களிடையே வன்முறையாளர்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர்; தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது தம்மைச் சுற்றி எத்தனை சண்டியர்கள் இருக்கிறார்கள் என்பதை வைத்து தங்கள் தேர்தல் வெற்றியை உறுதிசெய்து கொள்கின்றனர். இவ்வாறான நிலைமையில் சிறிலங்காவின் அரசியல் செயற்பாடுகளில் "சண்டியர்"என்ற கதாபாத்திரம் முக்கிய இடத்தை வகிக்கிறது.

இந்த நிலைமை இதே விதத்தில் பல்கலைக்கழக பீடங்களுக்குள்ளும் நுழைந்துவிட்டது. பல்கலைக்கழகங்களுக்குள் எதிர்த்தரப்பாரைப் படுகொலை செய்வது மாத்திரம் இதுவரை நடைபெறவில்லை. தாக்குதல்கள், வெட்டுகள் - கொத்துகள், பீதியடையச் செய்தல் ஆகியன குறைவின்றிப் பல்கலைக்கழக மாணவ அரசியல்வாதிகளிடையே நிலவுவதைக் காணக்கூடியதாய் உள்ளது. சில காலத்துக்கு முன்னர் பல்கலைக் கழகங்களுக்குள் அரசியல் தொடர்பான கருத்து வேற்றுமைகள் மட்டுமே நிலவின. அவை பெரும்பாலும் வாத-விவாதங்களில் முடிவடைந்தன. ஆனால் அவ்வாறான வாத - விவாதங்கள் தற்போது பல்கலைக் கழகங்களுக்குள் இடம் பெறுவதை அவதானிக்க முடியவில்லை. இதுதான் நாளை நாட்டின் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்க உள்ள இளைஞர்கள், யுவதிகளின் நிலைமையாகும். எனவே எதிர்காலத்திலாவது இந்த நிலைமை திருந்தும் என நம்புவதற்கு வாய்ப்பில்லை.

இவ்வேளையில் வன்முறைகள் வளர்ச்சியடைவது குறித்து விரல் நீட்டிக் கூறும் ஆற்றல் பல்கலைக் கழக மாணவ, மாணவியர் எவருக்கும் இல்லை. காரணம் இந்த நாட்டின் அரசியல் என்பதை அரசியல் வன்முறையாகவே அவர்கள் காணுகிறார்கள். எனவேதான் அரசியலையும் வன்முறைகளையும் வெவ்வேறாகப் பிரித்தறிய முடியாத நிலையில் இளைஞர்களும் யுவதிகளும் உள்ளனர். அரசியல் வன்முறை என்பது தற்போது எமது நாட்டில் உள்ள முக்கிய சமூகப்பிரச்சினை என்பதை அடையாளம் காணக்கூட பல்கலைக் கழகங்களில் பொருத்தமான சூழ்நிலை இல்லை. இருப்பினும் பல்கலைக்கழகங்களில் இந்த நிலைமையை இல்லாது ஒழிப்பதற்கு சட்டதிட்டங்களைக் கொண்டுவரும் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தாங்கள் அல்லது தங்களது கட்சி உறுப்பினர்கள் மேற் கொள்ளும் அரசியல் அடாவடித்தனங்களைக் குறைக்கவோ அல்லது அவற்றை நிறுத்தவோ முற்படாமல் இருப்பது இந்த நாட்டு மக்களின் துர்ப்பாக்கியமாகும்.

## வன்முறையை ஊக்குவிக்கும் சலுகைகள்

சிறிலங்காவின் தேர்தல் கலாசாரத்தில் உள்ள மற்றுமொரு சிறப்பான விடயம் என்னவெனில் வன்முறையாளர்களுக்கு கிடைக்கும் விசேட சலுகைகள் ஆகும். தேர்தல் வேளையில் வன்முறைகளை மேற்கொள்ளத் தேவையான பல வசதிகளை வேட்பாளர்களே வழங்குகிறார்கள். நவீன சுகபோக வாகனங்கள், ஆயுதங்கள், அடையாள அட்டைகள், தங்குவதற்கு சுற்றுலா விடுதிகள் ஆகியன இவ்வசதிகளில் அடங்கும். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் அவரது பிரதேசத்தில் பெரும் புள்ளியாக இருப்பின் தனது பிரதேசத்துக்குள் தன்னை எதிர்த்துப் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளரின் சுவரொட்டிகளோ, கொடிகளோ அல்லது 'கட்அவுட்'டுக்களோ இருக்கக் கூடாது என அவர் எண்ணுகிறார். அவர் நினைப்பதை செயற்படுத்த வேண்டுமாயின் வன்முறையே தேவைப்படுகிறது. எனவே பாதாள உலகத்தினரின் ஒத்துழைப்பைத் தான் பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற முட்டாள்தனமான எண்ணம் வேட்பாளர்களைப் பற்றிக் கொள்ளுகிறது. இவ்வாறான சூழ்நிலையில் அதிகமான பயன்களைப் பெறுபவர்கள் பாதாள உலகத்தைச் சேர்ந்தவர்களே.

மேலே குறிப்பிட்ட வசதிகளைப் பயன்படுத்தி தங்கள் எதிரிகளைப் படுகொலை செய்வதிலும் தாங்கள் பொலீஸாரால் தேடப்படுபவர்களாக இருப்பின் இந்தச் சலுகைகளைப் பயன்படுத்தி பொலீஸாருக்கு அழுத்தங்களைக்கொடுத்து அவற்றில் இருந்து விடுதலை பெறுவதிலும் அவர்கள் வெற்றி பெறுகிறார்கள். இந்தவேளையில் தங்களுக்குத் தேவையான சிறப்பான ஆயுதங்களையும் பெற்றுக் கொள்ளுகிறார்கள். தேர்தல் முடிவடைந்த பின்னர் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட காப்பாளர்களாக நியமனம் பெற அவர்களுக்கு வாய்ப்புகள் உள்ளன. அல்லாவிடின் சமாதான நீதிவான்களாக நியமனம் பெற்றுத் தங்களது கொடிய செயல்களைக் கண்டறிய முயற்சிக்கும் பாதுகாப்புத் துறையினருக்கு அழுத்தங்கள் கொடுப்பதில் வெற்றியடைகிறார்கள். பாதாள உலகத்தைச் சேர்ந்தவர்களை கைது செய்ய வேண்டிய கட்டுப்பாடு பொலீஸாருக்கு உண்டு. ஆனால் மேலே கூறப்பட்டுள்ள தொடர்புகள் காரணமாக பாதாள உலகை அழிக்க முடியாதுள்ளது என்ற உண்மை எப்போதோ உறுதியாகிவிட்டது.

இந்த அனைத்துச் செயல்களின் இறுதியான பலாபலனாக முழுச்சமுதாயமுமே உருக்குலைந்து போகும் நிலை உருவாகியுள்ளது. ஒரு சமூகம் உருக்குலைந்து போவதானது சமூகக்கட்டுப்பாட்டுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தலாக அமையும் என்பதே சமூக விஞ்ஞானிகளின் கருத்தாகும்.

இவ்வாறான நிலையில் சட்டம் தொடர்பாக சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் அமைப்புகள் தொடர்பாக மக்கள் மத்தியில் அவநம்பிக்கை உருவாக்கியுள்ளது. இவை மனிதனின் ஆரம்பகாலச் சமூக பழக்க வழக்கங்களுக்கு இட்டுச் செல்கின்றன. கொலைக்குக் கொலை, பழிக்குப் பழி என்னும் மனிதனின் ஆதிப்பழக்கங்கள் மீண்டும் சமூகத்தில் இடம்பெற இவை வழி வகுக்கின்றன.

சமூகம் உருக்குலைந்த காரணத்தாலேயே இன்று கூட சிறிலங்காவில் படுகொலைகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகிறது. அதேபோலவே பொலீஸ் போன்ற அமைப்புகள் மக்களைப் பாதுகாப்பதற்காக அல்ல என்ற எண்ணமும் தற்போதைய சமூகத்தில் வன்மையாக உருவாகி வருகிறது. ஏதாவது ஒரு விடயத்திற்கு பொலீஸ் நிலையம் செல்வதாயின் அரசியல் வாதிகள் ஊடாகவே செல்லவேண்டும் என்ற எண்ணம் மக்கள் மனதில் உருவாவதற்குக் காரணம் வன்முறை அரசியல் ஊடாக உருவான சமுதாயச் சீர்குலைவே ஆகும்.

அரசியல் வன்முறையுடன் கூடவே மற்றும் பல தாக்கமான சமூகப்பிரச்சினைகளும் உருவாகின்றன. அதில் ஒன்றுதான் இளைஞர்களின் பொறுமை சோதிக்கப்படுகின்றது. நடைபெற்று வரும் வன்முறை, அரசியல் வன்முறைகளின் மத்தியில் தங்களுக்குள்ள வாக்குச் சுதந்திரம் பயனற்றது என இளைஞர்கள் புரிந்து கொள்ளும் போது அரசியல் அதிகாரம் பற்றித் தீர்மானிப்பதற்கு அவர்கள் மாற்று வழிகளை நாட முற்படுகிறார்கள்.

1987ஆம் ஆண்டில் இடம்பெற்றது இதுவேதான். அன்று பொறுமை இழந்த இளைஞர்கள் தேசப்பிரேமி ஜனதா முன்னணியுடன் இணைந்து தங்களது உரிமைகளை வென்றெடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டனர். அப்போது அந்த அரசியல் வன்முறைகளில் இருந்து அவர்களை மீட்க மகாசங்கத்தினர், கட்சிகளின் தலைவர்கள், புத்திஜீவிகள் ஆகியோர் எவ்வாறு முயற்சிகளை மேற்கொண்டார்கள் என்பதை அண்மைய வரலாற்றை சற்று உற்று நோக்கினால் புரிந்துகொள்ள முடியும். அன்று இளைஞர்களின் பிரச்சினைகள் எவை என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளாததும் அந்தப் பிரச்சினைகளை கவனத்தில் எடுக்காததும் நாட்டில் பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்களின் உயிர்கள் காவு கொள்ளப்படுவதற்கும் பெருமளவிலான சொத்துக்கள் அழிக்கப்படுவதற்கும் காரணங்களாகின. தற்போது இடம்பெறும் அரசியல் வன்முறைகள் மூலம் இறுதியில் அவ்வாறான துன்பியல் நிகழ்வுகளே இடம்பெறும். வரலாற்றில் மீண்டும் அரசியல் வாதிகள் தவறிழைக்க முற்படுகிறார்கள்.

அரசியல் வன்முறைகளால் மற்றுமொரு சமூகப்பிரச்சினை உருவாகியுள்ளது. அரசியல் வாதிகளுடன் உடன்படாத அல்லது அரசியலை முற்றாக வெறுக்கும் சிறுவர்களின் பரம்பரை உருவாகிறது. முற்காலத்தில் அதிகமாக அரசியல் கட்சித் தலைவர்கள் தாங்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு முன்னர் பாடசாலைகளிலேயே தங்கள் பயிற்சிகளைப் பெற்று வந்தனர். சரித்திரக் குடியியல்கழகம், பௌத்த இளைஞர் மன்றம், இந்து இளைஞர்மன்றம், விஞ்ஞான மாணவர் கழகம் போன்ற பாடசாலைகளில் உள்ள மாணவர் கழகங்களில் பங்கேற்று வாத-விவாதங்களை மேற்கொண்டு அதன் மூலம் பயிற்சிகளைப் பெற்று பின்னர் அரசியலில் பிரவேசித்த சிறுவர் பரம்பரை எம்மிடையே இருந்தது. ஆனால் இன்று அந்த சிறுவர் பரம்பரையினர் அரசியல் எனக் கற்பது அடாவடித்தனத்தையும் வன்முறையையுமே ஆகும்.

## எதிர்கால சமூகத்துக்கு ஆபத்து

அரசியல் விஞ்ஞானம் பயிலும் போது கூட அந்தப் பாடம் தொடர்பான நூல்களை வாசிப்பதில் இளைஞர்கள் அக்கறை காட்டுவதில்லை. ஓர் அரசியல் கூட்டத்திற்குச் சென்று அதிலிருந்து எந்தவொரு விடயத்தையும் தற்போதைய பரம்பரையினரால் கிரகிக்க முடியாது. காரணம் இன்று அரசியல் கூட்டங்களில் கெட்ட வார்த்தைகளும் எதிரணியினருக்கு சேறு பூசும் பேச்சுகளுமே மேற்கொள்ளப்படுகின்றன. பயமோ சந்தேகமோ இன்றி தான் விரும்பும் பேச்சாளரின் பேச்சை அரசியல் மேடை அருகே நின்று கேட்கும் வாய்ப்பு தற்போதைய பரம்பரையினருக்கு இல்லை. அரசியல் மேடையை நோக்கி கைக்குண்டு வீசப்படுமா? அல்லது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படுமா? என்ற நிச்சயமற்ற தன்மையால் - பெற்றோர்கள் விதிக்கும் தடையைப் போலவே - அங்கு நிலவும் பாதுகாப்பற்ற தன்மை காரணமாக சிறுவர்கள் அரசியல் கட்சிக் கூட்டங்களுக்குச் செல்வதில்லை.

**தமிழில்- கஜனி**

இவ்வாறான வன்முறை அரசியல் கலாசாரத்தில் சமாதானத்தை விரும்பும் பொதுமக்களுக்கும் புத்திஜீவிகளுக்கும் இடமில்லை. இவ்வாறான நிலைமைகள் அனைத்தையும் கவனத்தில் எடுக்கும்போது வன்முறை அரசியல் கலாசாரமானது எதிர்காலப் பரம்பரையை முற்றிலுமாகப் பாதிக்கும் சமூகப்பிரச்சினையாக உருவெடுக்கும் எனக் கூறமுடியும். இங்கு இடம்பெறும் ஒரே ஒரு செயற்பாடு என்னவெனில் யாரோ ஒரு தரப்பினர் அதிகாரத்தில் இருப்பதாகும். நாளைய தினம் தங்களதும் மக்களதும் பரம்பரைகளுக்காக நல்லதொரு நாட்டை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் ஏனோ அவர்களுக்கு உதயமாகவில்லை. இது அவர்களினதோ அல்லது எங்களது துர்ப்பாக்கியம் அல்ல. அவர்களது எங்களது வழித்தோன்றல்களின் துர்ப்பாக்கியமாகும்.

# வன்முறை நிறைந்த தேர்தலாக இனங்காட்ட ஐ.தே.க. முயற்சி

### அமைச்சர் திஸநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.3

வரலாற்றிலேயே வன்முறைகள் நிறைந்த தேர்தலாக இப்பொதுத் தேர்தலை ஐ.தே.க. இனங்காட்டி வருகிறது. எனினும்1994 பொதுத் தேர்தலில் அதிக வன்முறைகளும் கொலைகளும இடம்பெற்றுள்ளதை ஐ.தே.க. மறுத்துவிட்டது.

சமுர்த்தி, இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது இதுவரை ஐந்து கொலைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் நால்வர் பொ.ஐ.முன்னணி ஆதரவாளர்கள் - என்றார்.


நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2000

தேர்தல் மாவட்டம் - 10, யாழ்ப்பாணம்





தமிழினத்தின் தனித்தன்மையை நிலைநாட்டிட,
தமிழர்களின் ஆளுமைக் குரல் நாடாளுமன்றில்
தொடர்ந்து ஒலித்திட,
தமிழினத்தின் உறுதியான தலைமைத்துவத்தை
நாடாளுமன்றத்தில் நிலைநாட்டிட
தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதன்மை வேட்பாளர்
வீரசிங்கம் ஆனந்தசங்கரி சட்டத்தரணி
(சிரேஷ்ட உப தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி)
அவர்களை ஆதரியுங்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி X

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ~~2~~ X | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

(78910)

# அரசியல் தீர்வை முன்னெடுக்க பலமான அரசு ஒன்று தேவை!

## பட்டி வீரக்கோன் தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.3

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண பலமான அரசு ஒன்று தேவை. பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினாலேயே இது சாத்தியம் ஆகும்.

மேற்கண்டவாறு சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் பட்டி வீரக்கோன் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாட்டிலுள்ள ஜனநாயக முற்போக்கு சக்திகளினால் 1994 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு கொண்டு வரப்பட்டது.

1999 ஆம் ஆண்டு டிசெம்பரில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரண்டாவது தவணையிலும் ஜனாதிபதியாக பதவி வகிக்கத் தெரிவு செய்யப்பட்டார்.

ஆகவே அடுத்த அரசாங்கத்தை அமைக்கும் தகுதியும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கே இருக்கின்றது. ஜனநாயகத்தை மதிக்கும் முற்போக்கு கொள்கைகளைக் கொண்ட சக்திகள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைத் தெரிவு செய்யவேண்டும். பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு புறம்பாக மாற்று அரசாங்கம் வேறு இல்லை.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சி சார்பில் புதிய அரசமைப்புத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. எதிர்க்கட்சிகள் மற்றும் தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து பேச்சுவார்த்தை மூலம் தயாரிக்கப்பட்டதே இந்த புதிய அரசமைப்பு சட்டநகல் ஆகும்.

நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்புச் சட்டத்தை அங்கீகரிக்க தடையாக சதிமுயற்சியில் இறங்கிய ஐக்கிய தேசிய கட்சி தனது நடத்தைக்கான காரணத்தை இன்னமும் விளக்கவில்லை.

பதிலுக்கு அரசியல் கட்சிகளுடனும் மதத் தலைவர்களுடனும் மீண்டும் பேசவுள்ளதாகவும், புலிகளுடனும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க உள்ளதாகவும் வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக சபையை நியமிக்கப் போவதாகவும் ரணில் கூறி வருகின்றனர். ஆனால் ஜே.ஆர்.ஜெயவர்தனா காலத்தைப்போல் வருடக்கணக்காக பேச்சுவார்த்தைகள் தொடரலாம். ஐ.தே.கவை பொறுத்தவரையில் புலிகளுடன பேச்சுவார்த்தை நடத்துவதும் இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதும் அதிகாரப்பரவலாக்கத்தின ஒரு அங்கமாக இல்லை. இது அரசமைப்பு சட்டத்துக்கு முரணானது என்றே கருதவேண்டும்.

புலிகள் ஆயுதங்களை வைத்திருக்கும வரையில் பிரச்சினைகள தீரப்போவதில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் (வடக்கு - கிழக்கு இணைப்பு) ஆயுதங்களைக் கையளிக்கும் விடயத்திலேயே பிரச்சினை ஆரம்பித்தது என்பதை ஐக்கிய தேசிய கட்சி மறந்துவிட்டது -என்றார்.

(இ-4)

# நாடாளுமன்றை லிப்ரன் சுற்றுவட்டத்தின் நிலைக்கு மாற்றியது ஐ.தே.க.வினரே!

## பிரதமர் ரத்னசிறி கண்டனம்

கொழும்பு,ஒக்.3

"எவ்வளவுதான் முயற்சித்தாலும் ஐ.தே.கவினரால் பதவிக்கு வர முடியாது. மீண்டும் ஆட்சி அமைப்பது நாங்களே ஐ.தே.கவின் நாடாளுமன்றத்தை சுற்றுவட்டத்தின் நிலைக்கு மாற்றி விட்ட நாம் ஆட்சிபீடம் ஏறும்போது ஐ.தே.கவிலுள்ள முக்கிய பிரமுகர்கள் சிலர் எம்மோடு இணையக் காத்திருக்கின்றனர்" மேற்கண்டவாறு எல்பிட்டியில் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

காலி மாவட்டப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிப் பிரசாரப் கூட்டத்தில் உரையாற்றும்போது பிரதமர் மேலும் கூறியதாவது:-

நான் பிரசாரக் கூட்டங்களுக்குச் செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் அலை எம்மை நோக்கியே வருகிறது. இந்தச் சனசமுத்திரத்தைக் காணும்போது எமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

அடுத்த நாடாளுமன்றத்தை ஒழுக்கநெறியோடு கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. இதற்கு முன் இருந்த நாடாளுமன்றம் லிப்ரன் சுற்று வட்டம் போலிருந்தது. நாடாளுமன்றத்தை அந்த நிலைக்குத் தள்ளியவர்கள் ஐ.தே.கவினரே. இந்த நிலைமையை அடுத்த நாடாளுமன்றம் அமையும் போது மாற்றி அமைப்போம்.

எமக்குத் தேவை கௌரவ பொறுப்புடைய நாடாளுமன்றமே ஆகும். எமது வேட்பாளர் பட்டியல்களில் சிறந்த, பொறுப்புமிக்க, ஒழுக்கம் நிறைந்தவர்களே இருக்கின்றனர்.

ஐ.தே.கவைச் சேர்ந்த ஒரு பகுதியினர் எமது கட்சியில் இணைந்துள்ளனர். மற்றும் ஒருபகுதியினர் ஐ.தே.கவில் இருந்து கொண்டே எமக்கு ஆதரவு தருகின்றார்கள். தனது நண்பன் யார்? பகைவன் யார் என்று ரணிலுக்குத் தெரியாது. இன்னும் பலர் எம்முடன் இணையத் தயாராக இருக்கிறனர்.

ரணிலுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் என்னென்ன ஒப்பந்தங்கள் இருக்கின்றன என்று எனக்குத் தெரியாது. நான் அதுபற்றிக் கேட்கவும் மாட்டேன் - என்றார்.

(இ-4)

# 22 எம்.பிக்களுடன் நாம் நாடாளுமன்று செல்வோம்!

## சிறிசேனகுரே கூறுகிறார்

"இரண்டு மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்பட்ட எமது கட்சி இத் தேர்தலில் 22 மாவட்டங்களில் போட்டியிடுகின்றது. 22 மாவட்டங்களிலிருந்தும் தலா ஒருவர் வீதம் 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு ஒரு பலமிக்க சக்தியாக நாடாளுமன்றம் செல்வோம். இம்முறை எமது ஆதரவு இல்லாமல் எந்தஒரு கட்சியாலும் ஆட்சி அமைக்க முடியாது. எமது கட்சியின் கொள்கைகளை முறையாகச் செயற்படுத்த உறுதி அளிப்பவர்களுக்கு நாம் ஆட்சி அமைக்க ஒத்துழைப்பு வழங்குவோம்."

மேற்கண்டவாறு பிரஜைகள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சிறிசேன குரே தெரிவித்தார்.

மாத்தளை அலுவிகாரையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் ஒன்றையொன்று விமர்சித்துக் கொண்டிருக்கின்றனவே தவிர நாட்டில் புரையோடிப் போயுள்ள பிரச்சினைகளுக்கு முடிவு கட்டவும்,மனித சமுதாயத்தின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுக்கவும முன்வருவதாகத தெரியவில்லை.

பொ.ஐ.முன்னணியின் ஆறுவருட ஆட்சியின் நிகழ்வுகளைக் கண்டு இந்தநாட்டு ஜனநாயக வாதிகள் விரக்தி அடைந்துள்ளனர். ஆறு வருடம் நாட்டை ஆட்சிசெய்த பொ.ஐ.மு. அரசு, நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றாது சிதறடித்து விட்டது.

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாச ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த திட்டங்கள் வகுத்துச் செயற்பட்டார். பொ.ஐ.முன்னணியும் ஐ.தே.கவும் இத்தகைய வேலைத் திட்டங்களை முழுமையாக கைவிட்டதனால் இன்று ஏழை எளிய மக்களின் ஆதரவை இழந்துள்ளன.

நாம் ஏழைகளினதும் குறிப்பாக இந்தநாட்டில் வறுமைக் கோட்டுக் கீழ் வசித்துவருவோருக்கு வளமான வாழ்க்கை ஒன்றினை அமைத்துக் கொடுக்கும் வகையிலேயே எமது செயற்திட்டங்களை வகுத்துள்ளோம் - என்றார்.

(இ-4)

# கந்தனே எந்தன் பிரதிநிதி

தேர்தலிலே நின்றொருகால் தேர்வு பெற்று அரசவையில்
பேர்பெறிக்க என்னுபவர் பிரலாபம் கேட்டிடுவீர்!
ஆர்வமுடன் பிரதிநிதி ஆகஇவர் படும்பாடும்
தேர்தலின்பின் நிலைப்பாடும் தெளிவாகச் செவிமடுப்பீர்!

வாக்குமிகக் கேட்டிடுவார் வலமிடமாய்(ச்) சுற்றிடுவார்
போக்கதுவும் வரவதுவும் புறம்புறமாய்(த்) திரிந்திடுவார்
நோக்கமெலாம் பெரிதாக நூதனமாய்(ச்) சொல்லிடுவார்
காக்கவெனத் காமிருக்க(க்) கவலையெலாம் விடுமென்பார்

நாக்காலே பலஉறுதி நயமாக எடுத்துரைப்பார்
ஆக்கம்பல செய்வோமென ஆதரவாய் அறிவிப்பார்
ஏக்கமெலாம் போக்கிடுவோம் எமக்குத்தான் வெற்றிஎன்பார்
மூக்குமுட்ட முசுப்பாத்தி முவ்வேளை தந்திடுவார்

உடுபுடைவை ஊக்குநிதி ஊரெல்லாம் உதவிடுவார்
எடுபிடிகள் பலபேரை ஏவலுக்காய் அமர்த்திடுவார்
நடுஇரவில் பலபேரை நாட்கூடத்தி வைத்திடுவார்
தடுமாறி மோசடிகள் தரகர்பலர் செய்திடுவார்

தட்டுத்தடு மாறிஇவர் தாம்வெற்றி பெற்றுவிட்டால்
எட்டாத திக்கெல்லாம் எக்களிப்பை இயம்பிடுவார்
செட்டுமிகத் தலைக்கேறச் சீரகதிரை அமர்ந்திடுவார்
இட்டமுடன் இவர்தலைகள் ஊர்ப்பக்கம் வையார்கள்

ஐந்தாண்டு காலமெலாம் அடுத்தமுறை வரும்வரையும்
வந்தவகை நினையார்கள் வாக்குறுதி எண்ணார்கள்
சொந்தநலம் மிகப்பேணிச் சொகுசாக வாழ்ந்திடுவார்
பந்தங்கள் தூக்குபவர்; பணஊட்டுக் கொடுப்பவர்கள்;

சொந்தங்கள்; சொகுசானர்; சோக்கிற்காய் உதவிடுவார்;
சிந்தனையில் மக்கள்நலச் சிரத்தையின்றிச் சேமிப்பார்
எந்தவகைப் பதவிகளை ஏந்திடலாம் என்றிருப்பார்
அந்தவகை இந்தவகை அனுபவிப்பில் திளைத்திடுவார்

தேடிமிக அலைந்தலைந்து தெருத்தெருவாய்(ப்) படியேறி
வாடிடுவோர் சென்று'ஐயா'! வாய்வீச்சு என்னாச்சு?
நாடியும்நாம் வந்தாலும் நாயாக மதிப்புமில்லை
ஓடியும்நீர் ஒளிக்கின்றீர் உத்தியென்ன சொல்லிடுவீர்?

அதுசெய்வேன் இதுசெய்வேன் அன்றுரைத்தீர் என்னாச்சு?
இதுஎன்ன அலங்கோலம்! எதுஐயா உம்கோலம்?
பொதுமக்கள் படும்பாட்டைப் புறம்போக்காய்(ப்) பார்ப்பதென்ன?
எதுஉமது கொள்கையென்பீர்! என்னத்தைச் சாதித்தீர்?

உரிமைக்குக் குரல்கொடுப்போம்! ஒன்றுபட்டு நிற்போமென
எரிமலையாய் முழங்கினீரே! என்னாச்சு நம்பேச்சு?
கரிசனையின்(று) இல்லாமல் கதிரையதே கதியென்று
திரிகிறீரே இதுவென்ன திருகுதாளம்? என்றுகேட்டால்

'தனியாக நானொருவன் தட்டிஎதைக் கேட்கிறது
சனியன்கள் மற்றவர்கள் சாதகமாய் வருவாரில்லை
இனிஎன்ன செய்வதுநான் என்பாட்டைப் பார்க்கின்றேன்
கனிவாக எனக்கான காரியத்தை நடத்துகின்றேன்'

இப்படியாய்(ப்) பிரதிநிதிகள் எங்களுக்குச் சொல்லிடுவார்
எப்படியோ எடுப்போடும் சாய்ப்போடும் இருந்திவர்கள்
செப்படியாய் வித்தைகளைச் செய்தெமக்கு ஏமாற்று
ஒப்படையில் தப்பிடுவார் உதவாதார்! இவர்போக;

உற்றதுணை ஆகநின்று உயிருக்குள் உயிராகப்
பற்றுடனும் பரிவுடனும் பாங்குடனும் எப்போதும்
நிற்பனென ஒருகந்தன் நிலையாக வந்துற்றான்
வற்றாத இவன்தயவை வரித்ததுவும் என்தவமே!

அன்புடனும் அருளுடனும் அரவணைத்து எனையாண்டு
இன்பமுடன் எப்போதும் என்பிரதி நிதியானான்
அன்றுமுதல் இன்றுவரை அவன்நிறைவாய் எந்தனுக்கு
தென்பாகத் தெளிவாகத் தேவையெலாம் செய்திட்டான்

வாக்கெதுவும் கேட்காமல் வாய்வீச்சும் செய்யாமல்
நோக்கமெலாம் எங்களது நுகர்விற்காய் முன்வைத்து
காக்கின்ற காவலனாய் கருமமதே கண்ணானான்
ஏக்கங்கள் போக்குதற்கும் இன்பமதே சூழகற்கும்

வாக்குள்ளும் மனத்துள்ளும் வழியுள்ளும் அவன்வந்து
போக்கிற்கும் வரவிற்கும் புகலாக நின்றிட்டான்
காக்கவுமாய் ஊக்கவுமாய்(க்) கருவியென அவனுற்றான்
நோக்கத்தைப் புரிந்துகொண்டு நட்பமாய்(த்) தொழிற்பட்டான்

வேல்கொண்டான் வினைகொன்றான் வெவ்வேறாய் வேண்டியஎன்
பால்கொண்ட அன்பாலே புரங்குறவே தந்திட்டான்
மேல்ஒன்றும் கேட்காத மேன்மையுற அருளாட்சிக்
கோல்கொண்டு குறைவில்லா நிறைவாக எனைஆண்டான்

நான்ஒன்றும் அவனுக்காய் நலமேதும் செய்யவில்லை
ஊன்ஒன்ற உயிரொன்ற உள்ளத்தால் நினைத்தலன்றி
நான்என்ற நினைப்பற்றேன்; அவன்தானே எப்போதும்
ஏன்என்றும் கேட்காமல் என்கருமம் பார்க்கின்றான்

கந்தா!என்(று) அவன்பெயரைக் கனைப்புற்றால் அழைந்திடுவேன்
வந்ததுபோல் வந்துஉற்ற பாட்டமெலாம் போக்கிடுவான்
சிந்தாகுலம் தீர்த்தென்னைத் தெவிட்டாது வாழ்த்திடுவான்
பிந்திடநான் ஒருவரையும் பின்செல்லா(து) உடன்நிற்பான்

அந்தமுமாய் ஆதியுமாய் ஆறுதலைத் தருபவனாய்
எந்தவகைத் துன்பத்தும் ஏறுமயில் வந்துதிப்பான்
கந்தனிவன் கருணைபெறக் கடும்தவம்நான் செய்தேனோ?
விந்தைபுரி இவன்சேவை விதம்விதமாய் அமைந்திடுமே!

பற்றுறுதி பயபக்தி பண்ணி;இவன் பண்பெண்ணி
முற்றுமுழு தாகஎனக்(கு) உற்றவனாய் வரித்திட்டேன்
மற்றுமொரு பிரதிநிதி நான்வேண்டேன் முருகனிடம்
பெற்றஅரும் பெரும்வளங்கள் பேசிடவே முடியாது

அருளாட்சி அவனாட்சி அரசாட்சி திருவாட்சி
இருளாட்சி செய்கூர்க்(கு) எதிராட்சி; இதுமாட்சி
கருமாட்சி; சமநீதி சர்வமுமே பெறுமாட்சி
உருவாட்சி(க்) கந்தனேஎன் உளமார்ந்த பிரதிநிதி

– தீவகன் –

## வெள்ளிவிழா

கொண்டாடவிருக்கும்
தேவி அச்சகத்தினரை

## பொன்விழா

நோக்கி வீறு நடைபோட
~ மனமார வாழ்த்துகின்றோம். ~

**திருச்செல்வி அச்சகம்**
மானிப்பாய் (78962)

---

## நெஞ்சை விட்டகலா
## 25 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 - 08 - 1917



உதிர்வு 03 - 10 - 1975

திருமதி
**மேரி கிருபையம்மா இராஜக்கோன்**

தியாகங்கள் பல புரிந்து
திரு விளக்காய் நீர் ஒளிர்ந்து
உருத்தந்து திரு தந்த
உயர்வு மிகு அன்னையே!
கருவில் உருவான அன்று முதல்
எமை கண் இமை போல் காத்த தெய்வம் நீரல்லவோ?
அன்னையவர் தெய்வத்தோடு
கூடிக் கொலுவிருக்க பிள்ளைகள்
நாம் பாசத்தால் பேரொளியைத் துதித்திடுவோம்.

அன்புப் பிள்ளைகள்
*ஏழாலை வடக்கு, ஏழாலை.*
*28, றக்கா ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*
(78884)

---

## நீங்கா நினைவில்
## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **இராசையா இராமு**

மண்ணில் 1950 – 01 – 26
விண்ணில் 1998 – 09 – 27

திதி: 2000 – 10 – 03

இல்லத்தின் ஒளிவிளக்காய் சுடர்விட்டுப் பிரகாசித்த
தந்தையே!
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில்
கொள்ளும் தெய்வமே!
உங்கள் நினைவில் ஈராண்டுகள் கழிந்ததையா!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
நினைவு எம்மை விட்டகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்:
தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள், மைத்துனர்மார்.

*தற்காலிக முகவரி: திக்கம், கரவெட்டி.*
*"இலட்சுமி பவனம்" கிளாலி, எழுதுமட்டுவாழ்.*
(C/13156)

---

## முதியோர் தினவிழா

வலி.கிழக்கு,ஒக்.3

நல்லூர் பிரதேச செயலர் பிரிவின சர்வதேச முதியோர்தின விழாவும், சர்வதேச சிறுவர் தினமும் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக கேட்போர்கூட மண்டபத்தில் பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா தலைமையில் இடம்பெறும்.

இந்த விழாவுக்குச் சிறப்பு விருந்தினர்களாக சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருமதி கே.சிவராசாவும், நல்லூா உதவி பிரதேச செயலர் எஸ்.வேன்முருகோண் பிள்ளையும் கலந்து கொள்வர்.

இந்தப் பிரதேசத்தில் உள்ள கிராமசேவையாளர் பிரிவுகளில் இருந்தும் தலா ஒவ்வொரு முதியோர்கள் விழாவுக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர்.

கட்டுரைப் போட்டிகளில் பங்கு பற்றித் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும வழங்கப்படும். முதியோர்கள், சிறுவர்களை பேணுவது பற்றிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (ஐ-180)

## போஷாக்கு திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு

சண்டிலிப்பாய், ஒக். 3

வலிகாமம் மேற்கு பிர... சபைப் பகுதியில் சிறு... போஷாக்கு திட்டத்தை மேற்... வதற்காக 7 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பிரதேச சபை தலைவர் ந. திரிலோகநாதன் இந்த நிதி ஒதுக்கீட்டை மேற் கொண்டுள்ளார். (க-135)

---

## ஓராண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில் 21 - 05 - 1971



அதர்மத்தின் கையில் 15 - 10 - 1999

அமரர் **கணபதிப்பிள்ளை பத்மநாதன்**
(உபதலைவர், பூங்காவனவிழாக் குழு, தென்புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலயம்.)

திதி: 03 – 10 – 2000

ஆண்டொன்று ஆடிக்கழிந்ததோ நின்
அன்பும் அறுந்து முடிந்ததோ
மாண்டதென்று மனம் நினைத்திடுமோ
மனத்தை விட்டு நினைவு விழுந்திடுமோ
மீண்டதென்று நின்னுயிர் மீள வந்திடுமோ
மீண்டும் புலோலி உன்னைப் பெற்றிடுமோ
ஆண்டொன்று ஆகியும் இளமை துடிக்கும் உன்
அன்புக் கரங்களை நெஞ்சம் மறந்திடுமோ.

உம் பிரிவால் துயருறும்
**தந்தை, சகோதர சகோதரிகள்,**
**மைத்துனர்கள், மைத்துனிமார்,**
**மருமக்கள், பெறாமக்கள்**
மற்றும்
**உற்றார், உறவினர், நண்பர்கள்.**

*சாரையடி, புலோலி.*
(78959)

---


# வேண்டாம்
# வன்முறை

தேர்தல் வன்முறையைக் கண்காணிப்பதற்கான நிலையம் (தே.வ.க.நி)

**ஜனநாயகத்தை காக்க வன்முறைக்கெதிராக வாக்களியுங்கள்**

# போதிய வாகன வசதி இல்லாததால் தேர்தல் பணிகள் பாதிப்புறும் ஆபத்து

யாழ்ப்பாணம் ஒக். 3

யாழ். மாவட்டத்தில் பொதுத் தேர்தல் கடமைகளைச் செய்வதற்கு போதிய வாகன வசதிகள் இல்லை என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு மட்டும் 89 பஸ்கள் தேவை என்றும் —

இடம் பெயர்ந்துள்ள வாக்காளர்களின் போக்குவரத்துக்கு நூறு பஸ்களும்தேவைப்படும் என்றும் — மதிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் பணிகளுக்கு என தேவையான பஸ்களை ஒதுக்கித் தருமாறு வடபிராந்திய போக்குவரத்துச்சபை மற்றும் தனியார் மினிபஸ் உரிமையாளர்களிடம் அறிவிக்கப்பட்டது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை 40 பஸ்களை மட்டுமே வழங்க முடியும் என்று தெரிவித்துள்ளது.

தனியார் மினிபஸ் உரிமையாளர்களும் 30 பஸ்களையே தரமுடியும் என்றும் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் தினத்தில் பயன்படுத்த பல கட்சிகளும் மினி பஸ்களைவாடகைக்கு அமர்த்தியுள்ளதால் போதியளவு மினிபஸ்களை யாழ். செயலகத்தினால் பெறமுடியாதிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை தேர்தல்பணிகளுக்கு என மேலதிகமாக 40 பஸ்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்குமாறு யாழ். அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான க. சண்முகநாதன் கொழும்புக்கு அறிவித்துள்ள போதிலும் அதற்குச் சாதகமாகப் பதில் கிடைத்ததாகத் தெரியவில்லை.

தேர்தல் தினத்துக்கு முன் 40 பஸ்களும் அனுப்பி வைக்கப்படாது விட்டால் தேர்தல் பணிகளில் பாதிப்பு ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## பண்ணிசைப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 3

நெடுந்தீவுக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்டமட்டப் பண்ணிசைப் போட்டிகள் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. (உ-7)

# 20,000 வாக்காளர் அட்டைகள் யாழ்.பிரதம தபாலகத்தில் தேக்கம்

## விநியோகிக்க முடியாத நிலையில்

யாழ். பிரதம தபாலகத்துச்கு உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த வாக்காளர்களின் 20 ஆயிரம் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படாத நிலையில் பிரதம தபாலகத்தில் உள்ளன.

பாதுகாப்பு இல்லாமை உரிய முகவரியில் வாக்காளர்கள் இல்லாதுஇடம்பெயர்ந்து சென்றமை போன்ற காரணங்களினாலேயே வாக்காளர் அட்டைகளை உரியவர்களுக்கு விநியோகிக்க முடியவில்லை என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரையும் வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தேர்தல் தினமான எதிர்வரும் 10 ஆம் திகதி வரையும் நேரில் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேவேளை—

தபால் ஊழியர்கள் மூலம் வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் நேற்று முடிவடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3-10)

# 18 பேருக்கு நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், ஒக். 3

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த 18 பேரை யாழ். மாவட்ட நீதிமன்றம் நேற்று விடுதலை செய்தது.

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 20 பேர் மீதான வழக்கு விசாரணைகள் அநுராதபுரம் நீதிமன்றத்திலிருந்து அண்மையில் யாழ். நீதிமன்றத்துக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தன.

சந்தேகநபர்கள் 20 பேரும் அநுராதபுரம் நீதிமன்றத்தால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் 18 பேருக்கு எதிரான வழக்குகள் தொடர்பில் போதிய ஆதாரங்கள் இல்லாததால் அவர்களை விடுவிக்க சட்டமா அதிபர் சிபார்சு செய்ததைத் தொடர்ந்து யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா அவர்களை விடுதலை செய்தார்

விடுதலைக்கான சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கிடைக்கப்பெறாத ஏனைய சந்தேக நபர்களான கிருஷ்ணன் சிவானந்தமூர்த்தி (மட்டுவில், கொடிகாமம்), சிவகுரு ஜீவபாலன் (மீசாலை வடக்கு) ஆகியோரை எதிர்வரும் நவம்பர் 6 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு குறித்த கிராமசேவகர் ஊடாக அவர்களுக்கு அறிவுறுத்தல் அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

விடுதலை செய்யப்பட்ட 18பேரின்பெயர்கள்வருமாறு:

ஆறுமுகம் ஆனந்தராசா (குடத்தனை, வரணி), இராசையா தர்மலிங்கம் (அச்சுவேலி), சின்னையா விமலகுமார் (மீசாலை வடக்கு), நடராசா நேசன் (வட்டுக்கோட்டை தெற்கு), அர்ஜுனன் சந்திரன் (கொடிகாமம், கச்சாய் வீதி), தில்லைநாதன் மகேந்திரராஜா அல்லது புத்திரவேல் (உடுவில் கிழக்கு), டொன் பொஸ்கோ ஜோன் டிக்சன்கோ தமிழ்வாணன் (பண்டத்தரிப்பு), நற்குணம் மனோரஞ்சன் (மானிப்பாய்) மருதநாயகம் வெஸ்லி ராஜேஸ் கண்ணா (சாவகச்சேரி, நுணாவில்), கதிரன் ஜெகதாஸ் (தொண்டைமானாறு), குணசிங்கம் விஜயகுமார் (தொண்டைமானாறு), குமார் விஜோத்குமார் (உடுப்பிட்டி), சோதிப்பிள்ளை பிரதீப் (உடுப்பிட்டி), சின்னத்தம்பி சின்னத்துரை (கரவெட்டி தெற்கு), சிவபாலன் நாகபூசனி (சுழிபுரம் மேற்கு) செல்வநாயகம் சத்திய சாயி பாபா (சுன்னாகம்), இராசரட்ணம் கணேசலிங்கம் (வரணி), கதிர்காமலிங்கம் ஜெயநிதன் (சாவகச்சேரி, கச்சாய் வீதி). (உ-9-ரி)




'கடமை... கண்ணியம்... கட்டுப்பாடு...'

**பண்ணாகம்**

**அண்ணா கலைமன்றம்**

(ஆரம்பம்: 3-10 1969) (பதிவு இல. யா/48)

எமது மன்றம் மக்கள் சேவையில் தனது 32 ஆவது அகவையை ஆரம்பிக்கும் இந்நவராத்திரி நன்னாளில் வித்தியாரம்பம் செய்வதற்குரிய பனை ஓலை ஏடுகள் எம்மால் அன்பளிப்பாக வழங்கப்படும்.

- நிர்வாகம்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

(78993)



**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**

**வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்**

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தவிசாளரினால் கீழ்க்குறிப்பிடப் பட்டிருக்கும் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன:

1. கேள்விப் பத்திரங்களை 20-10-2000 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் எம் '9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தகாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கும் ஒப்பந்தகாரர்கள் ஆகியோரிடமிருந்தும் அங்கீகரிக்கப்பட்ட பொது ஸ்தாபனங்களிடமிருந்தும் கோருகின்றேன். கீழே குறித்த தொகையை செலுத்தி கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.
2. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்பவர்கள் கணிய அளவுச் சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியைக் கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து தலைவர், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு இரண்டாம் பிரதியை யாழ்ப்பாணப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 28-10-2000ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கிடையில் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. கேள்விகள் 23-10-2000 ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்குத் திறக்கப்படும். அந்தச் சமயம் கேள்விகள் சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
5. கேள்விகள் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
6. மேலதிக விவரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

| தொடர் இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 01. | கொம்மாந்தறை வீதி புனரமைத்தல் | ரூ. 1000 | ரூ. 250 |
| 02. | மாவடி பராசக்தி ச. ச. நிலைய குழாய்க்கிணறு அமைத்தல், | ரூ. 200 | ரூ. 100 |
| 03. | நாவலர் ச. ச. நிலைய கட்டடம் அமைத்தல். | ரூ. 1000 | ரூ. 250 |
| 04. | ஸ்ரீஅம்பாள் ச. ச. நிலையத்தில் மலசலகூடம் அமைத்தல். | ரூ. 200 | ரூ. 100 |
| 05. | கிழவித் தோட்டம் ச. ச. நிலைய பாலர் பாடசாலைக் கட்டடம் அமைத்தல். | ரூ. 1000 | ரூ. 250 |
| 06. | கப்புதூ ச. ச. நிலைய கட்டடம் புனரமைத்தல். | ரூ. 1000 | ரூ. 250 |
| 07. | கோவிற் சந்தையில் இரு மலசல கூடங்கள் அமைத்தல். | ரூ. 250 | ரூ. 150 |
| 08. | நெல்லியடி பொதுச்சந்தை கூரை திருத்தல் | ரூ. 250 | ரூ. 150 |

வ. நடராசா ஜே. பி.
தவிசாளர்,

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை,
கரவெட்டி. 2-10-2000.

(சி/13175)



**கண்ணீர் அஞ்சலி**

**கந்தசாமி இரவிச்செல்வம்**

(ஊழியர் சு. ப. நோ. கூ. சங்கம்)

உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

புதன் அன்று கடமைக்கு வந்தாய் ஐயா!
வியாழனன்று வந்ததையா உனது அவலச்செய்தி
தீயிலே வெந்தபுண் ஆறும் என்றார்கள்—ஆனால்
நேற்று வந்ததையா உன் மரணச் செய்தி!
நாமெல்லாம் கலங்கி நின்றோம்

அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்.

(சி/13176)



**கண்ணீர் அஞ்சலி**

எமது சக உத்தியோகத்தர்

**வீ. இரத்தினகாந்தன்**

அவர்களின் அன்புத் தந்தை

**மயில்வாகனம் வீரசிங்கம்**

அவர்களின் மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்ததுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்,

யாழ்.மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள
உத்தியோகப்பற்றற்ற
கணக்காய்வாளர் சங்கம்

(சி/13173)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### ஸ்கூட்டர் விற்பனைக்கு

நல்ல நிலையில் டாக்டரின் பாவனையிலுள்ள புதிய மொடல் பஜாஜ் ஸ்கூட்டர் (வெள்ளை நிறம்) விற்பனைக்குண்டு.தரகர் தேவையில்லை. தினசரி காலை 8.30 தொடக்கம் 12.30 வரை பார்வையிடலாம். தொடர்பு: மங்களபதி வைத்திய சாலை, பண்டாரிக்குளம பிள்ளையார் கோவிலடி, நல்லூர்.
(78891)

### DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக கட்டுரைகள், பல்கலைக் கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக்கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-) தொடர்பு: பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 3081. (C/13122)

### திருமண சேவை

எங்களிடம் எல்லா மதங்களிலும் மணமக்கள் உண்டு. புகைப்படம், ஜாதகங்களுடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.(78996)

### மணமகள் தேவை

யாழ்.இந்து குடும்பத்தைச்சேர்ந்த அமெரிக்காவில் படித்த பட்டதாரியாக TELECOM ENGINEER தொழில் செய்யும் 25 வயது மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. தொடர்பு: சி.சிவசோதி, சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு.
(78995)

### தரம் 10 புதியபாடத்திட்டம்

கணிதம் பகுதி II, தமிழ் இலக்கியம (விருப்பத்துக்குரியது), ஆங்கிலம், அலகு 1, 2, 3, 4, மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: கணேசன், கே.கே.எஸ். வீதி, கொக்குவில். (78893)

### பிரத்தியேகவகுப்புகள்

எமது "நியூ வீணா கானம்" இசை மன்றத்தில் சகல இசை வகுப்புகளுடன் ஆண்டு 6-11 வரையான மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், சமயம், சமூகக் கல்வி, சங்கீதம் ஆகிய பாடங்கள் விஜயதசமி அன்று ஆரம்பமாகின்றன. நேரம் 3.00 p.m - 7.00 p.m வரை. தொடர்பு: செல்வி வாசுகி ரங்கன், 60, வைமன்வீதி, நல்லூர். (78979)

### விற்பனைக்கு

நல்ல பயன் தரக்கூடிய நல்லின தென்னங்கன்றுகள் 500 விற்பனைக் குண்டு. தொடர்பு: ப.கேதீசன், 26, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம்.
(78991)

### இலக்கியக் கட்டுரைகள்

O/L மாணவர்க[illegible]மிழ் மொழியும் விருப்பப் பாடமான தமிழ் இலக்கியமும் கற்பதற்கு உதவக் கூடிய கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள், நாவல் எல்லாவற்றுக்கும் விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. ஆக்கம்: அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை.
(78999)

### தலையலங்காரமும் ஒப்பனையும்

யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிற்கு தலையலங்காரமும் ஒப்பனையும் செய்ய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி ரூபா சத்தியமூர்த்தி, இல.27, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (78998)

### விற்பனைக்குண்டு

எயர் கொம்பிரசர், எயர் றிங்ஸ் 3, 20 தொன் ஜெக் விற்பனைக் குண்டு. தொடர்பு: த.அரியரட்ணம், 'தர்மவாசா', லோட்டன் றோட், மானிப்பாய். (79001)

## வாக்காளர் அட்டைகள் தேக்கம்

தென்மராட்சி,ஒக்.3

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகள் உரியவர்களால் சேகரிக்கப்படா நிலையில் கரவெட்டியில் இயங்கும் சாவகச்சேரி, பளை ஆகிய தபால் நிலையங்களில் தேங்கியுள்ளன.

இப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து வலிகாமம், தீவகம் போன்ற பிரதேசங்களில் தங்கியுள்ள மக்களின் வாக்காளர் அட்டைகளே தேங்கியுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

இந்த வாக்காளர் அட்டை[illegible] உரியவர்களே பெற்றுக்கொள்ள[illegible] வேண்டுமென அறிவுறுத்தப்படுவதால் போக்குவரத்து, தற்போதைய யுத்தச் சூழ்நிலை ஆகியவற்றால் ஏனைய பிரதேசத்தில் தங்கியுள்ள மக்கள் வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முன் வரவில்லை எனத் தெரியவருகிறது. (3-117)

## நினைவுப் பேருரை

நல்லூர்,ஒக்.3

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் வி.சிவசுப்பிரமணியத்தின் ஞாபகார்த்த நினைவுப் பேருரை நாளை புதன்கிழமை கல்லூரி ஸ்தாபகர் கந்தையா உபாத்தியாயர் நினைவு மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு அதிபர் க.சிவாஜியின் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் முன்னைய முதல்வர்களின் நிர்வாகக் கட்டமைப்பு என்ற தலைப்பில் யாழ்.மாவட்ட மேலதிகக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி நா.தணிகாசலம்பிள்ளை நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர் வைத்திய கலாநிதி எஸ்.சிவானந்தராஜா, இராமநாதன் கல்லூரி முதல்வர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோரும் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (க.111)

## யாழ்.றோட்டறிக் கழகம்

அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு
**18.11.2000க்குப் பிற்போடப்பட்டுள்ளது.**

(C/13168) - செயலாளர்

## தேவை

போட்டோஸ்ரற் பிரதிகள் செய்யும் வேலைக்கு பெண்கள் இருவர் தேவை. 10.10.2000 (ஞாயிறு) க்கு. முன்னர் நேரில் வரவும்.

சன்லைற் றைக்கிளினேர்ஸ்
23, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(79008)



உ

## காரைநகர் பாலாவோடை குறிஞ்சாக்குளி
# ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்

### *அறங்காவலர் சபை அங்குரார்ப்பணம்*

அம்பிகை அடியார்களுக்கு!

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலுக்கான அறங்காவலர்சபை சட்டரீதியாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, அறங்காவலர் சபைக்கான அங்கத்தவர்கள் தெரிவு மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி கோயில் பாலஸ்தானம் செய்து பல வருடங்களாகியும் கும்பாபிஷேகம் செய்யப்படாமை காரணமாக இக்கோயிலின் கும்பாபிஷேகத்தை நடத்தியும் அதன் சகல மேம்பாடுகளுக்காகவும் இவ் அறங்காவலர் சபையினர் அரும்பணியாற்றிட முன்வந்துள்ளனர் என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருகிறார்கள். ஆகவே அடியார்கள் அனைவரினதும் உதவி ஒத்துழைப்பினை அம்பாள் அருளால் வேண்டுகின்றோம். இக்கைங்கரியத்தை இனிதே நிறைவேற்ற உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து தங்களால் இயன்ற நிதியுதவியைக் கீழே கொடுக்கப்பட்ட வங்கிக்கு அனுப்பி இப்பணியில் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**SRI MUTHUMARI AMMAN TEMPLE TRUST**
Account No. C12302
Bank of Ceylon, Second Branch, Jaffna.

மேற்கூறிய அறங்காவலர் சபைக்கு மட்டுமே உங்கள் நிதி உதவியை செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

### *அறங்காவலர் சபை அங்கத்தவர்கள் விவரம்*

| | |
|---|---|
| தலைவர்: | ச.ச.இராசரத்தினம் |
| உபதலைவர்: | ச.ஆ.இராசலிங்கம் |
| செயலாளர்: | ச.ச.பாலச்சந்திரன் |
| பொருளாளர்: | ச.ச.ஞானப்பிரகாசம் |

98, விவேகானந்த மேடு,
கொழும்பு - 13

பாலாவேடை, களபூமி,
காரைநகர்.
(78990)

# இதய அஞ்சலி

## சின்னத்தம்பி இராமலிங்கம்

30.09.2000 சனிக்கிழமை ஸ்கந்தபுரத்தில் காலமான சாவகச்சேரி கற்குழியைச் சேர்ந்த தொழிலதிபர் சின்னத்தம்பி இராமலிங்கம் அவர்கள் சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய நித்திய வழிபாட்டுக்காரராகவும், பொருளாளராகவும், உப தலைவராகவும், தலைவராகவும், ஆலயத்திருப்பணிக்கும், தேர்த்திருப்பணிக்கும், தேர்த் தரிப்பிடத் திருப்பணிக்கும் தன்னாலான பூரண ஒத்துழைப்பையும் தாராளமான நிதியையும் கொடுத்து ஆலய வளர்ச்சியில் தன்னிகரற்ற ஆத்மீக வாதியாகவும் சைவ ஆசார சீலராகவும் இருந்து ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் பதம் அடைந்த அன்னாருக்கு இதய அஞ்சலி செலுத்துகின்றோம்.

-பரிபாலன சபை

செயலாளர்
பெருங்குளம் ஸ்ரீ அம்பலவாண
வீரகத்தி விநாயகர் ஆலயம்.
(79000)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
1910 - 06 - 12



உதிர்வு
2000 - 09 - 04

அமரர்
## சின்னத்தம்பி வீரகத்தி

04-09-2000 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் சி.வீரகத்தி அவர்களின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறி எமது துன்பத்தில் பங்கு கொண்டோருக்கும் வைத்திய உதவி புரிந்து ஆதரவளித்த டாக்டர் வேலும்மயிலும் அவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நாளை (04-10-2000) புதன்கிழமை எம்து இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரிகள்.**

*வல்லிபுரக் கோயில் வீதி,
புலோலி தெற்கு,
புலோலி.*
(78992)

# நீங்காத நினைவலைகள்

முதலாம் ஆண்டு நினைவு — நான்காம் ஆண்டு நினைவு



அமரர்
## ஆறுமுகம் கமலநாதன்

(உதவிக் கல்விப் பணிப்பாளர் - வலிகாமம்)

மண்ணில் மலர்வு:- 22.12.1939
விண்ணில் அமர்வு:- 15.10.1999
திதி:- 03.10.2000

சென்று மறைந்ததோ ஓராண்டுகாலம்!
வென்று நிற்பதோ உங்கள் அன்பு முகங்கள்!
இணைந்து வெள்ளிவிழாக்கண்ட துணைவிதனை
அணைத்துக் கொண்டீர் மூன்றாண்டு காலத்தில்
கல்வி உலகிற்கோ கலங்கரை விளக்கே!

திருமதி
## புவனேஸ்வரி கமலநாதன்

மண்ணில் மலர்வு:- 12.12.1941
விண்ணில் அமர்வு:- 01.10.1996
திதி:- 18.09.2000

நல்கி உரைப்பவர்க்கோர் அளவில்லை இங்கே!
துணைவனைப் பிரிய மனமின்றித் துடித்தீரே!
அதுதான் அரிய கணமதில் அழைத்தீரோ!
நிலைத்து நிற்கும் நினைவலைகள்
நிலமதனில் என்றும் பிரகாசித்திடுமே!

உங்கள் ஆத்ம சாந்தி வேண்டி இறைவனை இறைஞ்சும்.

அன்பு
**அத்தான் (அக்கா), அண்ணா (அண்ணி)
மருமகன், மருமகள்.**

*"மங்களவிலா"
உடுவில் கிழக்கு,
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.*
(78841)

# உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில்

# விரைவில் புதிய கற்கை நெறிகள்

யாழ்ப்பாணம், ஒக். 3

யாழ்ப்பாணம் உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் புதிய கற்கைநெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த மாதம் கொழும்பில் நடைபெற்ற உயர்தொழில் நுட்ப நிறுவனங்களின் பணிப்பாளர்களது கூட்டத்திலேயே கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டதாக நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதன்படி மீன்பிடியியல் தொழில் நுட்பம், பொறியியல் துறைகள் மற்றும் பதனிடும் தொழிற்பயிற்சிகள் ஆகிய கற்கை நெறிகள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

அந்தந்தப் பிராந்தியங்களுக்கு ஏற்ற வகையில் பயனளிக்கக் கூடியதும் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கக் கூடியதுமான கற்கைநெறிகளைத் திட்டமிட்டு ஆரம்பிக்குமாறு பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டதை அடுத்தே இந்தக் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்த நிறுவனத்துக்கென 5 வருடங்களுக்கான ஒருங்கிணைப்புத் திட்டம் ஒன்று நிறுவனத்தின் விரிவுரையாளர்களால் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-10-ரி)

---

## யா / இணுவில் மத்திய கல்லூரி
## கல்லூரித் தினமும்
## பரிசளிப்பு விழாவும் 2000

காலம்: இன்று (03-10-2000)
செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி
இடம்: கல்லூரித் திறந்தவெளி அரங்கு
தலைவர்: திரு. துரை எங்கரசு (அதிபர்)

பிரதம விருந்தினர்:
பேராசிரியர் செ. பாலச்சந்திரன்
(கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்:
திரு. இரா. நடராசா
(பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.
கௌரவ விருந்தினர்கள்:
திரு. இ. கையிலைநாதன்
(அதிபர், யா/சாவகச்சேரி இந்து தேசிய பாடசாலை)
திரு. ஆறு. திருமுருகன்
(ஆசிரியர் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி–சுன்னாகம்)
பரிசில் வழங்குபவர்:
திருமதி சத்தியலட்சுமி பாலச்சந்திரன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
பா. அ. வி. சங்கம், ப. மா. சங்கம்.

இணுவில் மத்திய கல்லூரி,
இணுவில்.
(சி/13147)

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி வள்ளிப்பிள்ளை இராமலிங்கம்

உதிப்பு 22-06-1943 | உதிர்வு 27-09-1998

**திதி: 03-10-2000 ஷஸ்டி**

அன்பினால் எமையெல்லாம்
உம் சிறகால் அரவணைத்தீர்!
ஆறவில்லை எம்மிதயம்
ஆண்டிரண்டு சென்றாலும்
எமதில்லத்தில் நீரென்றும்
பௌர்ணமி என்றிருந்தோம்!
தேய்பிறையும் உண்டென்று
அமைதியாய் உறங்கியதேன்.

உங்கள் பிரிவால் துடிக்கும்
- குடும்பத்தினர்.

நிரந்தர முகவரி:
அல்லிப்பளை,
பளை.

தற்காலிக முகவரி
ஆலங்குளம்,
சண்டிலிப்பாய்.

(79009)

---

## சனசமூக நிலைய புனரமைப்புக்கு உதவி

யாழ்ப்பாணம், ஒக். 3

உரும்பிராய் மேற்கு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம் மற்றும் ஸ்ரீ வைத்தீஸ்வரா சனசமூக நிலையம் ஆகியவற்றின் புனரமைப்புக்கென ஈ. பி. டி. பி அமைப்பு நிதியுதவி வழங்க உள்ளது.

கடந்த மாதம் 15 ஆம் திகதி ஸ்ரீ வைத்தீஸ்வரா சனசமூக நிலையத்தில் நடந்த கலந்துரையாடலில் வலி கிழக்குப் பிரதேச சபையின் உபதலைவரும், ஈ. பி. டி. பியின் அச்சுவேலித் தொகுதி அமைப்பாளருமான ரவி இதனைத் தெரிவித்தார் என வைத்தீஸ்வரா சனசமூக நிலையம் வெளியிட்ட பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7)

## மெதடிஸ்த பிரார்த்தனை மண்டபம்

வடமராட்சி, ஒக். 3

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை மெதடிஸ்த திருச்சபை பிரார்த்தனை மண்டப 5 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர் வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறை — கட்டைவேலி சேகர முதன்மைக்குரு ஜெயா ஜெயரட்ணசிங்கம் தலைமையில் நடைபெறும். விழாவின் போது நன்றி தெரிவிக்கும் ஆராதனையும் இடம்பெறும.

(இ-173)

## எரி காயத்தால் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 3

படுக்கையில் குப்பி விளக்கு தட்டுப்பட்டு உடல் பூராவாகவும் தீப்பற்றி எரிந்து ஆபத்தான நிலையில் கடந்த 28 ஆம் திகதி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர் 4 நாள்களின் பின்னர் அங்கு மரணமானார்.

ஏழாலை தெற்கில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் சுந்தசாமி ரவிச்செல்வம் (வயது 27) என்பவரே உயிரிழந்தவராவார்.

(இ-15)

## வாய்க்கால் புனரமைப்பு

நானூற்றி இருபது அடி நீளமும் பத்தடி அகலமும் கொண்ட கட்டுடை மதவடி லேன் வாய்க்கால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் இப்பகுதிப் பொதுமக்களின் உதவியுடன் இதனைப் புனரமைப்புச் செய்துள்ளனர்.

மழைக் காலம் ஆரம்பித்து விட்டதால் புனரமைப்புச் செய்யப்பட்ட இந்த வாய்க்கால் ஊடாக வெள்ளம் பாய்ந்து செல்ல வசதியாக உள்ளது. இந்த வாய்க்காலை மக்கள் கடந்து செல்ல, பாலமும் அமைக்கப்பட்டுள்ளது.

(க-152)

---

## அறிவித்தல்

எமது சங்கப் பணியாளர்களான

1) திரு. மா. சோமசுந்தர ஐயர்
பொது முகாமையாளர்
சேவை முடிவுறுத்தப்பட்ட திகதி:
22-07-2000

2) திரு க. வே. பரமானந்தம்
வர்த்தக முகாமையாளர்
சேவை முடிவுறுத்தப்பட்ட திகதி:
06-05-2000

இவர்கள் இருவரினாலும் மேற்குறிப்பிட்ட திகதியில் இருந்து சங்கம் சார்பாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களுக்கு சங்கம் பொறுப்பில்லை என்பதனை சகலருக்கும் அறியத் தருகின்றேன்

இயக்குநர் சபைக் கட்டளைப்படி

செயலாளர்,
ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை

(சி/13169)

---

## கண்ணீர் அஞ்சலி

தீவக வலயக் கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்

திரு. சோ. பாலசுப்பிரமணியம்
அவர்களின் பாசமிகு தந்தையார்

## குருநாதர் சோமநாதர்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதற்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்,
தீவகக் கல்வி வலயம்,
வேலணை.
(79005)

---

## கண்ணீர் அஞ்சலி

தீவக கல்வி வலய அலுவலகத்தில் (மனைப் பொருளியல்) சேவைக்கால ஆலோசகராகக் கடமை புரிகின்ற

திருமதி மேரி திரேசா வசந்தகுமார்
அவர்களின் சகோதரன்

## மரியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதற்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள்
தீவக கல்வி வலயம்
வேலணை.
(79006)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 7 — 10 — 1922



மறைவு 03 — 09 — 2000

## அமரர் வேலுப்பிள்ளை செல்லத்துரை

(முறிவு, நெறிவு வைத்தியர், புலோலி கிழக்கு)

கடந்த 03-09-2000 ஆம் திகதி காலமாகிய எமது குடும்ப விளக்கின் அந்தியேட்டிக் கிரியையானது இன்று (03-10-2000) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதனால் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

சந்தா தோட்டம்,
புலோலி கிழக்கு,
புலோலி.

(79003

# கண்ணீர் அஞ்சலி

எமது நண்பரும், ஆசிரியருமாகிய
திரு. யோ. லிங்கேஸ்வரன்
(யா/ சாவகச்சேரி, இந்து ஆரம்ப பாடசாலை)
அவர்களின் அன்புத் தந்தையார்

## கணபதிப்பிள்ளை யோகலிங்கம்

அவர்களும்
அன்புத் தங்கை

## செல்வி தமிழரசி யோகலிங்கம்

அவர்களும் அகால மரணமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையுமடைகின்றோம்.

அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள்
(95 – 96 ஆண்டு அணி)

வலிகாமக் கல்வி வலயம்.

தகவல்:
வ. முருகதாஸ்

(சி/ 13167)

# 2 ஆம் ஆண்டு நினைவுதினம்

பிறப்பு: 19 – 08 – 1946



இறப்பு: 03 – 10 – 1998

## திருமதி றெஜினா மயில்வாகனம்

இருவிழி கருமணியில் இருப்பிடம் கொண்டவளே!
ஈராண்டு பறந்ததோ நீ பிரிந்து — உன்
பாதச் சுவடு பதிந்த இடமெல்லாம்
பார்க்கின்றோம் உன்னை! ஓடோடி வா!

பிரிவால் துயருறும்;
கணவன், பிள்ளைகள்,
பெற்றோர், மச்சாள்மார்,
மச்சான்மார், மருமக்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

இல. 211,
2 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(78883)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் மதியாபரணம் மகேசன்

(ரேவதி ஜுவலறி)

தோற்றம்: 27 – 01 – 1959
மறைவு: 27 – 09 – 1998

திதி: 03 - 10 - 2000

ஆண்டுகள் மறைந்து ஓடினும்
நீங்கள் கொண்டிருந்த அன்பு மறையவில்லை.
நேசத்தை விட்டு நீங்கள் சென்று
இரு வருடங்கள் சென்றிடினும்
நேசத்தால் உங்களை என்றும்
நெஞ்சில் தீபமாய் ஏந்துகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
தாய், மனைவி,
சகோதரர்கள்.

வளாக வீதி
திருநெல்வேலி.

(78958)

# தேர்தல் ஒழுங்குகள், 'ஸ்ரிக்கர்கள்' குறித்து ஆணையாளர் விளக்குவார்

கொழும்பு, ஒக். 3

தற்போது விநியோகிக்கப்பட்டுள்ள ஒருதொகை வாக்காளர் அட்டைகளில் 'ஸ்ரிக்கர்' ஒட்டப்படாதது குறித்தும், தேர்தல் வாக்களிப்புத் தொடர்பாகவும் தேர்தல் ஆணையாளர் விசேட அறிக்கை ஒன்றை விடுக்கவுள்ளார்.

தேர்தலுக்கு ஒரு வார காலத்துக்கு முன்பு ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க இந்த அறிக்கைகளை விடுக்க உள்ளதாக பிரதித் தேர்தல் ஆணையாளர் ரசிக பீரிஸ் தெரிவித்தார்.

இந்த அறிக்கை இன்று அல்லது நாளை வெளிவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுத் தேர்தல் வாக்களிப்பில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள், 'ஸ்ரிக்கர்' விவகாரம்உட்பட தேர்தல் பற்றிய பல்வேறு பணிகள் பற்றியும் அவர் இந்த அறிக்கையில் விளக்கிக் கூறவுள்ளதாக பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இதேவேளை 'ஸ்ரிக்கர்' ஒட்டப்படாது விநியோகிக்கப்பட்டுள்ள வாக்காளர் அட்டைகள் தொடர்பாகத் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். இவ்வாறான அட்டைகளைப் பெற்றிருப்போர் அது குறித்துத் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் முறைப்பாடு செய்ய முடியுமென்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தெரிவத்தாட்சி அதிகாரிகளின் பணிப்புரையின் கீழ் ஸ்ரிக்கர் ஒட்டப்படாத வாக்காளர் அட்டைகளில் ஸ்ரிக்கர்களை ஒட்டும் பணிகளில் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

வீடு வீடாகச் சென்று ஸ்ரிக்கர்களை ஒட்டுவதற்கும் அதிகாரிகள் தயாராகியுள்ளதாகப் பிரதித் தேர்தல் ஆணையாளர் சொன்னார். (இ-11)

## சமுர்த்தி நியமனக் கடிதங்கள்

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் 18 பேர் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்களுக்குரிய நியமனக் கடிதங்கள் கடந்த 22 ஆம் திகதி பிரதேச செயலகத்தில் வைத்து வலி. கிழக்குப் பிரதேசசபைத்தலைவரால்வழங்கப்பட்டன (இ–72–178)

## வாக்காளர் அட்டைகள் வழங்கல்

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வாக்காளர்களின் வாக்களிப்பு அட்டைகள் கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் இயங்கும் சாவகச்சேரி, பளை ஆகிய அஞ்சல் நிலையங்களில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன. (க-117)

## வீடு வீடாக தேர்தல் பிரசாரம்

தென்மராட்சி, ஒக். 3

பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் வாக்கு வேட்டைக்காக தமது பிரசார நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வடமராட்சிப் பிரதேசத்தில் வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்து வருகின்றனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, சுயேச்சைக் குழுக்கள் ஆகியவற்றின் வேட்பாளர்களே பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-117)

# நினைவுப் பேருரை அழைப்பு

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின்
புகழ்பூத்த அதிபரும் பேரறிஞருமாகிய
அமரர் உயர்திரு.

## வி. சிவசுப்பிரமணியம்

J. P அவர்களின்
( B. A, B. Sc, P. G. J, F. R. G. S )

## ஞாபக நினைவுப் பேருரை - 5

காலம்:- 04 - 10 - 2000 புதன்கிழமை
பகல் 10.00 மணி

இடம்:- கந்தையா உபாத்தியார் மண்டபம்

தலைவர்:- திருமிகு. க. சிவாஜி
(முதல்வர்-ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

நிகழ்ச்சிகள்

மங்கல விளக்கேற்றல்: அமரரின் மைந்தன்
Dr. சி. சிவானந்தராஜா
( பேரவை உறுப்பினர், யாழ். பல்கலைக்கழகம் )

நினைவு அஞ்சலிப்பா:

நினைவுப் பேருரை
ஸ்கந்தாவின் மைந்தன்
கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை
( மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் )

விடயம்:- "கல்வி நிர்வாக கட்டமைப்பும் முன்னாள் முதல்வர்களின் முகாமிப்பும்"


நிறைவுரை:- திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம்
(முதல்வர் - இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.

(சி/18150)

# பிரிந்தவரின் பிறந்தநாள் நினைவு



அமரர்

## Dr. அ. இராசநாயகம்

மலர்வு: 03-10-1933
உதிர்வு: 19-04-1996

மண்ணில் நின்று மறைந்தாலும் - எங்கள்
மனதை விட்டு மறையவில்லை.
எங்கள் இதயமென்னும் இல்லத்தில்
என்றென்றும் நிலைத்திருப்பீர்.

பாசமுள்ள குடும்பத்தினர்.

பானாவெட்டி,
தொல்புரம் மேற்கு.

(78868)

# நாடாளுமன்றத் தேர்தல் யாழ். மாவட்டம் - 2000

## ஸ்கந்தவரோதயக் கல்விச் சமூகத்தவர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்



தர்மலிங்கம்
சித்தார்த்தன்
இல.5

- ஸ்கந்தாவின் ஸ்தாபகர் 'எந்தை எனத்தகு கந்தையா வள்ளலின்' பேரன்.
- ஸ்கந்தாவின் வளர்ச்சிக்கு 'சிந்தையொடாயிரம் ஆயிரம் வீசும்' (டாக்டர் P.S. அப்பா) அவர்களின் பேரன்.
- உடுவில் மானிப்பாய்த் தொகுதியின் முன்னாள் பா.உ. (M.P) திரு. தர்மலிங்கம் (தர்மர்) அவர்களின் ஏக புத்திரன்.
- இவர் ஸ்கந்தா அன்னை பெற்றெடுத்த தவப் புதல்வர்களில் ஒருவர்; எம்மவர்.
- இவர் நாடாளுமன்றத் தேர்தலில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்+ஈரோஸ்) - கூட்டணியின் ஒருவர், தர்மலிங்கம் சித்தார்த்தன்.
- வன்னி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது வன்னியை வளமாக்கியவர். **அமரர் திரு.தர்மலிங்கம் (M.P) அவர்கள் (தர்மர்)**
- உடுவில் / மானிப்பாய்த் தொகுதி மக்களின் நெஞ்சகலா நண்பன்.
- தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் அறங்காவலர் சபையின் முன்னாள் தலைவர்.
- தெல்லிப்பழையில் திக்கற்ற பெண் குழந்தைகளின் நிறை வாழ்வு இல்லத்தை அமைக்க சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு உறுதுணையாக நின்றவர்.
- இவர்கள் வழியில் **தர்மலிங்கம் சித்தார்த்தன்** யாழ்ப்பாணம் கல்வியற் கல்லூரிக்கு தந்தையார் தர்மலிங்கம் ஞாபகமாக தனது 220 பரப்புக் காணியை வழங்கினார்.

# ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி

### புளொட் + ஈரோஸ்

வெற்றிபெற ஆதரித்து வாழ்த்துகின்றோம்.
பழைய மாணவர்கள் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

X

(78905)





சின்னையா சிவஞானம்(சுசித்)
(அ.இ.ச.நீ.)

X

12

யாழ்.மாவட்டத்தில் யுத்தத்தின் கோரப்பிடியாலும் இயற்கை நிகழ்வுகளாலும் 19,275 விதவைகள் தோன்றியுள்ளார்கள். இந்த விதவைகளின் கண்ணீரைத் துடைப்பதே எனது மகத்தான பணி.

இந்த விதவைகளின் நல்வாழ்வைச் சிந்திக்க இதுவரை யாரும் முன்வரவில்லை. அவர்களின் எதிர்காலம் பற்றியோ, அவர்களின் குடும்ப நலன்கள், குழந்தைகளின் கல்வி, பொருளாதாரம் இவைபோன்ற எதையும் சிந்திக்க யாரும் இதுவரை எந்தத் திட்டத்தையும் உருவாக்கவில்லை.

### *யாழ். மாவட்டத்தில்......*

| | | | |
|---|---|---|---|
| 0 - 16 | வயதிற்குக் கீழ் | - | 14 விதவைகள் |
| 16 - 30 | வயதிற்குள் | - | 756 விதவைகள் |
| 30 - 50 | வயதிற்குள் | - | 8770 விதவைகள் |
| - 50 | வயதிற்கு மேல் | - | 11,735 விதவைகள் உள்ளார்கள் |

### *இவர்களின் நல்வாழ்வுக்காக நாம் அளிக்கவிருக்கும் திட்டம் என்ன?*

- யாழ்.மாவட்ட விதவைகள் சம்மேளனம் உருவாக்குதல்.
- விதவைகள் நல்வாழ்வுக்காக விதவைகள் ஆண்டு பிரகடனம்.
- ஓய்வூதியமற்ற விதவைளுக்கு மாதாமாதம் 3,000 ரூபா கொடுப்பனவு நலன் திட்டம்.
- விதவைகளின் பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை.
- விதவைகளுக்கு விசேட அங்கத்துவ அடையாள அட்டை வழங்குவதுடன், குடா நாட்டிற்குள் இலவச பஸ் பிரயாணம்.
- மறு திருமணம் செய்ய விரும்பும் விதவைகளை, திருமணம் செய்யும் ஆண்களுக்கு கல்வித்தகைமைகளுக்கு ஏற்ப, வேலைவாய்ப்பு முன்னுரிமையும் வசதியும்.
- மறு திருமணத்தை விரும்பாதவர்களுக்கு வேலைவாய்ப்புத் திட்டம்.
- சுய தொழில் செய்ய விரும்புபவர்களுக்கு நிதியுதவியும் சந்தைப்படுத்தல் திட்டமும்
- கூட்டுப்பண்ணைத் திட்டம்.
- மறுதிருமணம் தொடர்பாக "விதவைகள் திருமண சபை" உருவாக்கப்படும். திருமணம் தொடர்பாக ஏற்படும் செலவுகளை 'விதவைகள் திருமண சபை' ஏற்கும்.
- மறுதிருமணம் செய்ய விரும்பாத (வயது, சமூகக் கொள்கைகள் போன்ற சூழலில்) விதவைகளின் பிள்ளைகளின் நலன்களைக் கவனிப்பதற்கு விதவைகள் சம்மேளனம் நடவடிக்கையெடுக்கும்.
- கணவனால் கைவிடப்பட்ட பெண்களும் இத்திட்டத்தில் இணைக்கப்படுவர்.



வேல்முருகு தங்கராஜா
(அ.இ.ச.நீ.)

X

11

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |

## *சுயேச்சைக் குழு – இல. 3 – ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி*

**சந்திரிகாவின் ஏகப் பிரதிநிதிகள் நாமே!**

(78918)

# மூதூரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பின்னர் மரணமானார்கள்.

இக்குண்டு வெடிப்பில் படுகாய முற்று கந்தளாய், திருகோணமலை வைத்தியசாலைகளில் அனுமதிக் கப்பட்டுள்ள பலரின் நிலை கவ லைக்கிடமாக இருப்பதாக வைத் திய வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிரிழந்தவர்களில் இருவர் கிண்ணியாவைச் சேர்ந்தவர்கள். ஏனையோர் மூதூரைச் சேர்ந்தவர் கள்.

இக்குண்டு வெடிப்பினால் அப்ப குதியில் பல வாகனங்கள் சேதம டைந்தன. அருகில் உள்ள பல கட்டடங்களும் கூட சேதத்துக்குள் ளாகின.

இந்தச் சம்பவத்தை அடுத்து மூதூரில் மட்டுமல்லாமல் திரு கோணமலை நகரப்பகுதியிலும் பெரும் பதற்றம் நிலவுகின்றது. தற் கொலைத் தாக்குதலாளி தங்கி யிருந்ததாகக் கருதப்படும் ஓட்டோ சுக்குநூறாகியுள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பின் அதிர்வு 12 மைல் தொலைவில் உள்ள திரு மலை நகரப்பகுதியைக் கூடக் கலக்கியதாகக் கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து அங்கு ஏற்பட்ட பதற்றம் காரணமாக மூதூர் வைத்திய சாலையில் பணி புரிந்த தமிழ் டாக்டர்கள் வைத்திய சாலையிலிருந்து பாதுகாப்பாக வேறிடங்களுக்குத் தலைமறைவான தாகக் கூறப்பட்டது.(உ-3-8-7-150-ரி)

## ஹிஸ்புல்லா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரின் ஜீப் குண்டு வெடிப்பில் சிக்கி யதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சம்பவத்தில் காயமடைந்த இரு பொலீஸாரும் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா பயணம்செய்த வாகனத்தை இலக்கு வைத்து கடந்த 31ஆம் திகதி வாழைச் சேனை - கோரக்கல்லி மடுப்பகுதி யில் வைத்து தாக்குதல் நடத்தப்பட் டதும் -

எனினும் பிரதியமைச்சர் எவ் வித காயமுமின்றி தப்பியதும் தெரிந்ததே. (உ-7-8)

## பலாலியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
"விமான ஓடுபாதை புலிகளின் பீரங்கிக் குண்டுகள் நெருங்க முடி யாத தூரத்தில் உள்ளது" என்று குறிப்பிட்ட இராணுவ அதிகாரி ஒரு வர்,

"விமானத் தளத்தைச் சுற்றி யுள்ள உயர் பாதுகாப்பு வலயத்துக் குள் புலிகளின் பீரங்கிக் குண்டுகள் வழுந்திருக்கக் கூடும்" - என்றார்.

கடந்த ஏப்ரல், மே மாதங்களி லும் புலிகளின் பீரங்கிக் குண்டுகள் பலாலி விமானத்தளத்தில் விழுந்த தால் அங்கு பெரும் பதற்றம் நிலவி யதாக அப்போது செய்திகள் வெளி யாகியிருந்தன என்பது தெரிந்ததே.

புலிகளின் இந்தத் தாக்குதல்கள் காரணமாக பலாலிக்கான விமான சேவையில் சிறு சிறு தடங்கல்கள் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விமான சேவைகளை அதிகாரிகள் மாற்றி அமைத்திருக்கக்கூடும் எனக் கருதப்படுகின்றது. (உ-3-133)

# தென்மராட்சி கிழக்குப்பகுதியில் வாக்குச்சாவடிகள் அமைப்பதா?

## தேர்தல் திணைக்களம் குழப்பநிலையில்!

தென்மராட்சி கிழக்கு பிரதேசத் தில் தற்போது நிலவும் அசாதாரண நிலைக்கு மத்தியில் எதிர்வரும் பொதுத்தேர்தலின்போது அப்பகுதி யில் வாக்குச்சாவடிகளை அமைப் பதா? விடுவதா? என்ற முடிவு எடுக்க முடியாத நிலையேற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

தென்மராட்சி கிழக்கில் ஒன்பது வாக்களிப்பு நிலையங்கள் அமைப் பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

தென்மராட்சி கிழக்கில் 12 ஆயி ரம் வாக்காளர்கள் இருந்தபோதிலும் கடந்த மே மாதத்திற்குப் பின் பலர் அங்கிருந்து இடம் பெயர்ந்து விட்ட னர்.

மீதியாக அங்கு தங்கியிருந்தவர் களில் பெரும்பாலானவர்கள் கூட கடந்த சனிக்கிழமை முதல் இடம் பெயரத் தொடங்கியுள்ளனர்.

இந்நிலையில் அங்கு வாக்குச்சா வடிளை அமைப்பதா என்பது குறித்து யாழ்.தேர்தல் திணைக்களம் குழப்ப மான நிலையில் இருப்பதாகக் கூறப் படுகின்றது. (உ-5)

## 6 பல்கலை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தகவல் வெளியிட்டன.

'ராகிங்' தொடர்பாகத் தொடர்ந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்தே இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் தெரிவிக் கப்பட்டது.

இதேவேளை -

கடந்த வாரம் பல்கலைக்கழு கைலாசபதி கலையரங்கில் இடம் பெற்ற மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வின் போது பல்க லைக்கழக அனுமதியின்றி மாண வர்களிடம் இருந்து நிதி சேகரிப் பதில் ஈடுபட்ட இரண்டு மாணவர் களுக்கும் பல்கலைக்கழகத்துக்குள் பிரவேசிபபதற்கு மூன்று மாத காலத தடைவிதிக்கப்பட்டுள்ளது. இது தொடர் பான கடிதங்களும் நேற்று அனுப்பி வைக்கப்பட்டதாகவும் - மேலும் தெரி விக்கப்பட்டது. (உ-7-10)

## தென்மராட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ராட்சிப் பகுதிக்கு வந்து சேர்ந்தனர் என புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில்-

தென்மராட்சி கிழக்குப் பகுதி மக்கள் அங்கிருந்து வெளியேறுவ தைத் தொடர்ந்து கொடிகாமம் பல். நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையகம், கொடிகாமம் தபால் நிலையம்,மற்றும் கொடிகாமம் நகர்ப் பகுதியில் சகல வர்த்தக நிலை யங்கள் அனைத்தும் தமது பொருள் களை ஏற்றி வடமராட்சிக்கு கொண்டு வருவதில் நேற்றுமுன்தினம் முழு நாளும் ஈடுபட்டிருந்தன.

மிருசுவில் வடக்கு, குடமியன் மற்றும் நாவற்காடு ஆகிய பகுதிக ளைச் சேர்ந்தமக்கள் தமது பொருள்களை எடுத்து வர அனுமதி மறுக்கப்பட்டதை தொடர்ந்து இந் தப் பகுதியிலேயே தங்கியுள்ளனர் எனவும்-

இந்தப் பகுதி மக்கள் தமது பொருள்களை எடுத்து வர அனுமதி வழங்குமாறு பளைப் பிரதேச செய லர் சு.புத்திசிகாமணி சம்பந்தப்பட்ட படை அதிகாரிகளிடம் வேண்டு கோள் விடுத்துள்ளார் எனவும்- தெரி விக்கப்பட்டது.

இடம்பெயர்ந்து வரும் மக்க ளுக்கு தேவையான உதவிகளை வழங்கும் பணியில் அரசியல் கட் சிகள் முண்டியடித்து ஈடுபட்டிருந்தன.

முள்ளி முகாம் பகுதியிலிருந்து வாகனங்கள் மூலம் அந்த மக்களை ஏற்றிவந்து வேறிடத்தில் தங்க வைப் பதற்கான வசதிகளை வழங்கும் பணியில் ஈ.பி.டி.பி.அமைப்பு ஈடுபட் டிருந்தது.

பாடசாலைகளில் அவர்கள் தங்குவதற்கான வசதிகளை செய்து கொடுத்ததுடன் அவர்களுக்கான உணவு வசதிகளையும் அந்த அமைப்பினர் வழங்கினர்.

ரெலோ சார்பு சுயேச்சைக் குழு, ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி ஆகி யனவும் அகதிகளுக்கு உதவி வழங்கும் பணியில் மும்முரமாக ஈடு பட்டிருந்தன. (உ-5-3-7-31-117-173)

## நேற்றும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அணிகள் தொடர்ந்து தாக்குதல் களை நடத்திவருவதாகவும் நேற் றைய சண்டையின்போது இராணு வக்காவலரண்களும், முன்னரங்க நிலைகளும் தாக்கி அழிக்கப்பட்டா தாகவும் விடுதலைப்புலிகள் தரப் பில் தெரிவிக்கப்பட்டது. மினிமுகாம் கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது.

"ஓயாத அலைகள்-4" தாக்குதல் மூலம் தென்மராட்சி கிழக்குப்பகுதி யில் நேற்றுவரை தாம் 20 கிலோ மீற்றருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பை மீட்டுவிட்டதாகவும் புலிகள் தரப்பில் உரிமை கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, விடுதலைப்புலி கள் வலிகாமம் பகுதி மீது ஆட்லறி ஷெல்களை ஏவி பொதுமக்களுக்கு சேதம் விளைவித்ததாகவும், சிறுப் பிட்டியில் இரண்டு பொதுமக்கள் காயமடைந்ததாகவும் விசேட ஊட கத்தகவல் நிலையம் கூறுகிறது.

நேற்றுக்காலையும் மாலையும் தென்மராட்சிப் பகுதி மீது இராணு வத்தினர் நடத்திய ஆட்லறித் தாக் குதல்கள் அடிக்கடி நகரப்பகுதியில் கேட்ட வண்ணம் இருந்தன. (அ-8)

## ட்ரக் மீட்பு!

கடந்த செவ்வாயன்று ஆயுத தளபாடங்களை ஏற்றிக்கொண்டு வந்த சமயம் வல்லைப் பாலத்தில் தடம்புரண்டு கடல் நீரேரிக்குள் வீழ்ந்த படையினரின் ட்ரக் நேற்று முன்தினம் மாலை படையினரால் மீட்கப்பட்டுள்ளது. படையினர் பாரிய பாரந்தூக்கிகளின் உதவியுடன் இந்த ட்ரக்கை மீட்டனர்.(உ-3-5-15-31-139)


(C/13164)

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!



(ஈ.பி.டி.பி.)

யாழ்.மாவட்ட அபிவிருத்திக்காக ஈ.பி.டி.பியின் ஏற்பாட்டில் 3 கோடியே 35 இலட்சம் ரூபா விசேட நிதியாக 1998 / 99ஆம் ஆண்டு காலப்பகுதியில் உள்ளூராட்சி சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இளைஞர்களே! யுவதிகளே!!
இனிவருங்காலம் உங்கள் காலம்!
தலை நிமிர்ந்து வாழ,
உங்களுக்கு வேண்டும் எதிர்காலம்!
உங்கள் வாக்குகள்
வீணைச் சின்னத்திற்கே!

**படிவம்**

தொழில் நுட்பக் கல்லூரி களில் நடத்தப்படும் கற்கை நெறிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்ப படிவம் விரைவில் விற்பனைக்கு வரும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 2000.11.10**

**பாரதி**
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (C/13170)

**BIT**
விரிவுரைகள் ஆரம்பம்

மேற்படி பட்டப்படிப்புக்கான விரிவுரைகள் அனைத்தும் தலைமையலுவலகத்தில் அறிமுக வகுப்புக்களுடன் 07-10-2000 காலை 09.00 மணி முதல் ஆரம்பமாகின்றன. அனைத்து மாணவர்களும் தவறாது சமுகம் தரவும்

முக்கிய குறிப்பு

மேற்படி BIT போட்டி பரீட்சையில் தெரிவு செய்யப்படாத மாணவர்களும், கணனித்துறையில் பட்டதாரியாக விரும்பும் மாணவர்களும் 07-10-2000 நடைபெறவிருக்கும் அறிமுகவகுப்பில் கலந்து கொள்ளவும். இவர்களுக்கான பயன்தரு திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த உள்ளோம்.

இயக்குனர், IIS
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

Institute of Business Management Studies
IBMS

**IBMS** இன் 2000/2001 புலமைப்பரிசில் திட்டம்

மேற்படி திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான விரிவுரைகள் அனைத்தும் 14.10.2000 முதல் ஆரம்ப மாகும். இத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டு தமது பதிவினை மேற் கொள்ளத் தவறியவர் கள் 12.10.2000 வரை பதிவினை மேற்கொள்ள லாம்.

**IBMS** இன் புலமைப்பரிசில் திட்டத்தில் இணையத் தவறியவர்களுக்கான விசேட சலுகை

மேற்படி மாணவர்கள் எமது நிறுவனத்தில் தமது கணனிப் பயிற்சியை மேற்கொள்ள விரும்பின் அவர்களுக்கான விசேட கழிவுக்கட்டண (75%) முறை உருவாக்கப்பட் டுள்ளது. இச் சலுகை எக்கணனிக் கற்கை நெறிக்கும் வழங்கப் படும். மேலதிக விவரங் களுக்கு தலைமை அலு வலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

DIRECTOR
No.701, K.K.S. Road,
Jaffna. (C/13161)

தென்மராட்சிக்கு ஏற்பட்ட அவலநிலை ஏனைய பகுதிக்கும் பரவாமல் இருப்பதற்கும்,

அந்த மக்களிற்கு ஏற்பட்ட பாதிப்புக்கு நஷ்ட ஈட்டைப் பெற்றுக் கொடுத்து மீண்டும் அவர்களைக் குடியமர்த்துவதற்கும்,

அவசரகாலச்சட்டம் உட்பட தமிழ் மக்களுக்கு எதிரான எந்த சட்ட நடவடிக் கைகளையும் எதிர்த்து நிற்பதற்கும்,

**ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களியுங்கள்**

X 4

(C/13179)



த.சுபத்திரன் (றொபேட்)
இல. 3

மானிட விடியலுக்காகவும்
மகத்தான சமாதானத்துக்காகவும்
வாக்களிப்போம்!

**சுயேச்சைக் குழு - 2** X

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எஃப்)



அ.வரதராஜப்பெருமாள்
இல. 1

(78901)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.10.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.